# மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

## எது வெற்றி, யாருக்கு வெற்றி?



மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 | 7—2—60 | ஒலி 14

# 758!

தூத்துக்குடி இடைத் தேர்தலில் சரியாக 758 ஓட்டுகளை அதிகமாகப் பெற்று காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றிருக்கிறது! "வெற்றி பெற்றிருக்கிறது" என்று சொல்லுவதை விட—"காங்கிரஸ் கட்சி சாகாமல் உயிர் தப்பிப் பிழைத்திருக்கிறது" என்றே சொல்ல வேண்டும்!

ஒரு ஓட்டு அதிகமாகப் பெற்றாலும், ஜனநாயக முறைப்படி வெற்றி வெற்றிதான்! இதை எவரும் மறுக்க முடியாது! மறுப்பாருமில்லை! ஆனால் அந்த ஒரு சில நூறு ஓட்டுகளால் வெற்றி பெறும் கட்சி என்றென்றும் நிலைத்து, நின்று, உயிர் வாழ்ந்திடும் என்றோ—அந்த ஒரு சில நூறு ஓட்டுகளால் தோல்வியடைந்த கட்சி அழிந்து மண்ணோடு மண்ணாய் மறைந்துவிடுமென்றோ கணக்குப் போட்டு, ஜாதகம் கணித்து, அகமகிழ்ந்து, கும்மாளம் போட முடியாது! இது, அனைவரும் அறிந்த அரசியல் அரிச்சுவடி! தூத்துக்குடியில் வெற்றி பெற்ற கட்சியும் இதை அறிந்து கொள்ள வேண்டும்!

தூத்துக்குடியில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறும் வாய்ப்பை இழந்து விட்ட காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகமே அழிந்து போய் விட்டதாக, ஆதரவை இழந்து விட்டதாக தமிழ் நாட்டு ராஷ்டிரபதி திரு. அளகேசனார் முரசு கொட்டி வருகிறார்! பெருமிதமும், பூரிப்பும் கொண்டு மகிழ்ச்சிக் கடலில் துள்ளி துள்ளி குதித்து விளையாடி வருகிறார்!

உண்மையிலேயே அவர்களுடைய மகிழ்ச்சியைக் கண்டு நாம், அவர்கள் மீது அனுதாபப்படத் தான் வேண்டியிருக்கிறது! தூத்துக்குடி தந்திருக்கிற பாடத்தை மறந்து, தூத்துக்குடி அளித்திருக்கிற தீர்ப்பை மறந்து வெட்கமில்லாமல் வெற்றி முரசம் கொட்டுவது நமக்குதான் நாணமாக இருக்கிறது! ஒரே நாட்டில், ஒரே இனத்தில் பிறந்து விட்ட காரணத்தால் அவர்களுடைய கும்மாளத்தைக் கண்டு நாம் வெட்கப்பட வேண்டி இருக்கிறது, லஜ்ஜையடைய வேண்டி இருக்கிறது, தலை குனிய வேண்டியிருக்கிறது!

உண்மையிலேயே அவர்கள் அரசியல் வாதிகளாக இருப்பார்களானால், தங்கள் கட்சியின் மீது நம்பிக்கையும், உறுதியும் இருக்குமானால் தூத்துக்குடி வெற்றியைக் கண்டு தலைகுனிந்திருக்க வேண்டும்! தங்கள் கட்சியோடு போட்டியிட்ட தோழர் சிவசாமிக்கு மாலை அணிவித்து, கரம் குலுக்கி அவரைப் பாராட்டி இருக்க வேண்டும்!

தூத்துக்குடியில் மொத்த வாக்காளர்கள் 91,231 பேர்!

திருவாளர் அளகேசனாரும், அவரது சீட கோடிகளும் நன்கு கவனிக்க வேண்டும்!

தூத்துக்குடி தொகுதியில் மொத்த வாக்காளர்கள் 91231 பேர்!

இதில் வாக்களித்தவர்கள் 64692 பேர்!

வாக்களிக்க வராமலேயே வீட்டிலிருந்தவர்களின் எண்ணிக்கை 26539 பேர்!

வாக்களித்த இந்த 64,692 பேர்களில் 1100 சரியான முறையில் வாக்களிக்கவில்லை! அதனால் செல்லாமல் போன ஓட்டுகள் 1100!

திருவாளர் அளகேசனார் தயவு செய்து இதை கவனிக்க வேண்டும்!

இவர்களில் காங்கிரஸ் கட்சியை 32,153 பேர்கள் ஆதரவளித்து ஓட்டளித்திருக்கிறார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தை 31,395 பேர் ஆதரித்திருக்கின்றனர்! அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்தைக் காட்டிலும் 758 பேர்களுடைய ஆதரவை காங்கிரஸ் கட்சி அதிகமாகப் பெற்றிருக்கிறது!

வெட்கம் இருக்க வேண்டாம்? கொஞ்சமேனும் ரோஷம் இருக்க வேண்டாம்?

பதின்மூன்று ஆண்டுகளாக நாட்டை ஆண்டு வரும் ஒரு கட்சி—அதிகாரத்திலிருக்கும் போதே, அந்த அதிகாரத்தையும், பண வசதியையும் பயன்படுத்திக் கொண்ட பிறகும் 758 ஓட்டுகளே அதிகமாகப் பெற முடிந்தது என்றால் என்ன பொருள்? செல்வாக்கிருக்கிறது என்று அர்த்தமா? அளகேசனாரே பதில் சொல்லட்டும்!

ஜனநாயகத்திற்கு விரோதமாக அதிகாரத்திலிருக்கும் அமைச்சர்களெல்லாம் தூத்துக்குடிக்கு ஓடினார்கள், வீடு வீடாக நுழைந்தார்கள்—கெஞ்சினார்கள், குழைந்தார்கள், குலாவினார்கள், மிரட்டினார்கள், உருட்டினார்கள், பாக்கட்டைத்தட்டித் தட்டிக் காட்டினார்கள்! இத்தனைக்குப் பிறகும் எங்களை விட நீங்கள் பெற்ற ஓட்டுகள் தான் எத்தனை? 758! 758! வெட்கம்! வெட்கம்!

ஒரு இடைத் தேர்தலில்—அதுவும் பணம், படை, ஆள், அம்பு, அதிகாரம் அத்தனையும் வைத்துக் கொண்டு 758 ஓட்டுகளைத் தான் அதிகமாகப் பெற்றிருக்கிறீர்கள் என்றால் உண்மையிலேயே வெட்கப் பட வேண்டாமா?

"தூத்துக்குடி தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அதன் பிரச்சாரத்தையும், அதன் கொள்கையையும் மக்கள் தூக்கி எறிந்து விட்டார்கள்" என்று அளகேசனார் அறிக்கை ஒன்றும் சமர்பித்திருக்கிறாராம்! 31395 பேர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் அதன் கொள்கையையும் ஆதரித்திருக்கின்றனர்! காங்கிரஸ் கட்சிக்கு இந்தத் தொகையோடு ஒரு 758 பேர் அதிகம் ஆதரவு தந்திருக்கின்றனர்! ஒரு 758 பேர் ஆதரவளிக்காத காரணத்தால் தி. மு. கழகமே அழிந்து விட்டது என்று பொருளா? இந்த 758 பேர்களுடைய ஆதரவை நாங்கள் பெறவே முடியாதா?

அரசியல் என்றால் அன்றாட வாழ்க்கைக்கு பயன்படும் பொருள் என்று கருதுபவர்கள் தான் இப்படியெல்லாம் பிதற்றுவார்கள்! அப்படிப் பிதற்றுபவர்களைப் பற்றி நாம் கொஞ்சமேனும் கவலைப்பட வேண்டாம்!

தூத்துக்குடித் தேர்தல் நமக்கோர் புதிய உற்சாகத்தையும், எழுச்சியையும், உணர்ச்சியையும் அளித்திருக்கிறது! ஆளும் கட்சிக்கு சமமாக, அடுத்து ஆளும் கட்சியாக இருக்கிறோம் என்பதை தூத்துக்குடி நமக்கு அறிவித்திருக்கிறது!

பணவசதி இருந்திருந்தால் இன்னும் ஒரு ஆயிரம் பேர்களை சந்தித்திருக்க முடியும், அவர்களிடம் நம் கொள்கை எடுத்துச் சொல்லி இருக்க முடியும், வெற்றியும் பெற்றிருக்க முடியும்!

நம்மிடம் கொள்கை இருக்கிறது! அதைப் பரப்பிட யாருக்கும் இல்லாத தொண்டர்களும் இருக்கிறார்கள்! இருந்தும் நாம் வெற்றி பெற முடியவில்லை என்றால் என்ன பொருள்! பணமில்லை, பணமில்லை!

அடுத்த தேர்தலிலாவது நாம் வெற்றி பெற வேண்டும்! அதற்காக நீங்கள் இன்றிருந்தே உண்டி வைத்து பணம் சேர்க்க வேண்டும்! பணம் இருந்திருந்தால் அந்த 758 பேர்களும் நமக்கு வாக்களித்திருப்பார்கள்! வாய்ப்பிருந்தும் வாய்ப்பை இழந்தோம்! இனியேனும் கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்! அதற்கான உறுதியை இன்றே எடுத்துக் கொள்ளுங்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதன் கொள்கைக்கும் பெரும் செல்வாக்கு உண்டு என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டி தி. மு. க. வுக்கு ஓட்டளித்த 31,395 வாக்காளர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

(11-ம் பக்கம் பார்க்க)

# உதட்டில் ஜனநாயகம்- உள்ளத்தில் சர்வாதிகாரமா?

## உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதீர்!

### ஆட்சியாளருக்கு அறிஞர் அண்ணு எச்சரிக்கை!


சென்னை, திருவல்லிக்கேணி, வெங்கட்டரங்கம் பிள்ளை தெருவில் தென்னவர் மன்ற ஆண்டு விழா 23—1—60ம் தேதி நடைபெற்றது. அதுபோது அறிஞர் அண்ணு அவர்கள் பேசியதாவது:

அன்புள்ள தலைவரவர்களே! பெரியோர்களே! நண்பர்களே!

இன்று இங்கு நமது கழகத்தின் துணை மன்றமான, தென்னவர் மன்றத்தின் ஆண்டு விழாவில் நான் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்கிறேன்!

இதற்கு முன் நான் இரண்டு கூட்டத்தில் பேசிவிட்டு வந்திருக்கிறேன், இந்தக் கூட்டம் முடிந்ததும் இன்னும் ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்.

இன்று இந்தக் கூட்டம் பல நெருக்கடியான இடத்தில் கூட்டப்பட்டிருக்கிறது. நீங்களெல்லாம் தெருக்களின் ஓரங்களில் உட்கார்ந்திருக்கிறீர்கள். வசதி இல்லாத நிலையில் தான் நாம் கூட்டம் நடத்த வேண்டியிருக்கிறது!




இந்தக் கூட்டம் ஒரு பொதுவான இடத்தில் நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. அது பல அசந்தர்ப்பத்தால் தடைப்பட்டது! அங்கு நமது கூட்டம் நடந்தால் என்ன நடந்துவிடும்? நமது பேச்சுக்களை மக்கள் கேட்டு உண்மை அறிந்து கொள்வார்கள் என்ற அச்சமா? அன்றி, அவர்களது பக்திக்கு இடையூறு வந்து விடும் என்ற பீதியா? அவர்கள் அப்படி பயப்பட வேண்டியதில்லை. நாம் நம்முடைய கருத்துக்களைத்தான் பரப்பி வருகிறோம்!

தென்னவர் மன்றம் நமது கொள்கைகளைப் பரப்பும் ஒரு மன்றமாக நடந்து வருகிறது. இது நமது கழகத்திற்குத் துணை மன்றமாக இருந்து பணியாற்றி வருகிறது! இது இன்று நல்ல வளர்ச்சியடைந்துள்ளது! நீங்களெல்லாம் இந்த மன்றத்திற்கு நல்ல ஆதரவு கொடுப்பதுடன் ஆலோசனையும் கூறி மன்றம் வளர்ச்சியுற அக்கறை காட்ட வேண்டுகிறேன்!

நான் கூட்டத்திற்கு வந்து கொண்டிருந்தபோது, நகர மன்ற உறுப்பினர் திரு. சிட்டிபாபு நகரமன்றத்தில் நமது கழகத்தினர் சென்ற பின் செய்த காரியங்களைப்பற்றியும், அங்கு உள்ள நிலைமைகளைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டேன்!

திராவிட முன்னேற்றக் கழகம் மாநகராட்சி மன்றத்திற்குச் சென்று நிர்வாகப் பொறுப்பினை ஏற்ற பின், அங்குபோய் செய்த பணிகளைப் பற்றி கூறும்போது, ஏழை பாட்டாளிகள் நடத்தும் துணிவெளுக்கும்கடைகளுக்கும், சிகை அழகுபடுத்தும் கடைகளுக்கும் உரிமைக்கட்டணத்தை நீக்கி விட்டதாகவும் கூறினர்!

மற்றும் பணக்காரர்களின் வீடுகளுக்கு வரி உயர்த்தியிருப்பதாகவும், பெட்ரோல் பாங்க்குகளுக்கு கட்டணம் உயர்த்தி இருப்பதாகவும் கூறினர்! இதைக் கேட்டவுடன் பணக்காரர்களுக்கு கோபமும் வருத்தமும் ஏற்படும்! பணக்காரர்கள், ஏழைகளின் நன்மைக்காகச் செய்யும் இம்மாதிரி காரியங்களுக்கு விட்டுக்கொடுக்கத்தான் வேண்டும்!

நகர மன்றத்திற்குச் சென்ற இவர்கள் ஏன் இந்தமாதிரி காரியங்கள் செய்கிருர்களென்றல், நம் கழகத்தின் சார்பில் மன்றத்திற்குச் சென்றவர்களெல்லாம் ஏழைகள்,, பாட்டாளிகள், என்றென்றும் ஏழைகளிடத்தில் பழகுகிறவர்கள், அவர்களிடத்தில் அக்கறை கொண்டவர்கள். அவர்களின் துயரை நன்குணர்ந்தவர்கள். அதனுல் தான் இந்த மாதிரி காரியங்கள் செய்கிருர்கள். இந்தமாதிரி மாற்றங்கள் செய்து வருவதை நாமெல்லாம் ஆதரிக்கவேண்டும்!

நகரமன்றத்திற்குச் சென்ற பின் என்ன சாதித்துவிட்டீர்களென்று காங்கிரஸ்காரர்களும் மற்றவர்களும் கூறுவதாக சிட்டிபாபு கூறினர்! அதுபற்றி நாம் கவலைப்படாது. நமது காரியங்களைச் செய்துவரவேண்டும்!

சென்னை நகரமன்றத்தில் நாம் என்ன செய்யமுடியும்? எது செய்தாலும் சென்னை சர்க்காரின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் காரியங்கள் ஆற்ற முடியும். சென்னை நகர மன்றத்திற்கு 2 லட்சம் ரூபாய் உட்பட்ட தொகைக்குத்தான் காரியங்கள் ஆற்ற முடியும், அதற்கு மேற்பட்டால் சர்க்காரின் அனுமதி கேட்க வேண்டும்! எந்தத் திட்டங்கள் போட்டாலும், அந்தத் திட்டங்களுக்கு சென்னை சர்க்காரை கேட்டுத்தான் செய்ய வேண்டும்!

தொழிற்சாலைகள் நிறுவி, தொழிலற்றவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமானல் அது இவர்களால் செய்யமுடியாது.

நமது அரசுவோ, அப்துல் காதரோ, சிட்டிபாபுவோ, முனுசாமியோ எதுவும் செய்ய முடியாது! அவைகளையும் கவனித்து தான் நாம் நமது பணிகளைச் செய்து வருகிறோம்! நமது எதிரிகள், நமக்குப் பேசத்தான் தெரியும். நிர்வாகத் திறமை இல்லை என்று மார்தட்டிக் கூறி வந்தார்கள். அவர்கள் கூற்றைப் பொய்ப்பிக்கும் முறையில் 2 முறை நமது மேயர்கள் வந்து தங்களது திறமையைக் காட்டி விட்டார்கள்! இதைப் பார்த்து அதிர்ச்சியுற்று பல சூழ்ச்சிகள் செய்து நம்மைத் தூற்றுகிருர்கள்!

இந்த கிளை மன்றத்திற்குத் தென்னவர் மன்றம் என்று பெயர் கொடுக்கப் பட்டிருக்கிறது! இதைப் பார்த்ததும் நம்மை கேலி செய்பவர்கள், மன்றம் வைப்பதில் கூடவா தெற்கு—வடக்கு என்று வைக்க வேண்டும். எதிலும் பிரிவுதானு என்று கேட்பார்கள்.

இந்த மாதிரி பிரிவுகள் நாம் மட்டும் கூறவில்லை. நமது முப்பாட்டன் காலத்திலிருந்தே கூறப்பட்டு வருகிறது. திசைகள் வந்ததிலிருந்தே இந்தப் பிரிவுகள் இருந்து வந்திருக்கிறது, வடக்கு-தெற்கு-கிழக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

# பற்றும் பாசமும் இருந்தால் போதாது! நமக்கு பணபலமும் வேண்டும்!

## அடுத்த தேர்தலில் ஈடுபட வேண்டுமானால் காசுகள் சேருங்கள்— அதைக் காணிக்கையாகத் தாருங்கள்!

(அண்ணா பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

-மேற்கு பிரிவுகள் ஏற்பட்டதிலிருந்தே வந்திருக்கிறது. அதே போல் ராஜ்யங்களைப்பார்க்கும் போதும் அங்குள்ள மக்களின், வாழ்க்கையையும் இங்குள்ளநிலைமைகளை பார்க்கும்போதும், அங்குள்ள வளர்ச்சிகளையும் செழிப்புகளையும் பார்க்கும்போதே இந்தப் பிரிவுகள் நமக்கு நன்கு புரியும். நீங்கள் இதை ஒப்பிட்டு பார்த்தால் நன்கு உணர்வீர்கள். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது — வடக்கில் வளம் பொங்குகிறது. தெற்கில் தரித்திரம் தாண்டவமாடுகிறது. வடக்கில் ஏழைகள் இல்லை. பணக்காரர்கள் முதலாளிகள் மலிந்திருக்கிறார்கள். தெற்கில் ஏழைகள் வேலையற்றோர், பிச்சைக்காரர்கள், குடிசைகளில் வாழ்வோர், நடைபாதையில் வசிப்போர், மிகுந்திருக்கிறார்கள், வடக்கில் தொழிற்சாலைகளும், பல திட்டங்களும் இருக்கிறது. தெற்கில் ஒன்றுமில்லை, இவைகளை நாம் கூறும்போது நம்மைப் பார்த்து நமது எதிரிகள்-நம்மை குறைகூறுபவர்கள், வடக்கில் ஏழைகள் இல்லையா? தெற்கில் பணக்காரர்கள் இல்லையா? என்று கேட்கிறார்கள். இவர்கள் அங்குபோய் பார்த்தால் தெரியும் என்கிறார்கள்!

நாம் அங்கு போய் பார்க்காமல் சொல்லவில்லை. வடநாடு முழுதும் பார்த்திருக்கிறோம். அங்கும், சில ஏழைகள், பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அப்படியே இருப்பதில்லை, மாற்றப்படுகிறது.

இங்கு ஏழைகள், பிச்சைக்காரர்கள் மாற்றப்படுவதில்லை, மாற்றும்படியான திறம் படைத்தவர்கள், நெஞ்சில் உறுதி கொண்டவர்கள் இங்கில்லை! அங்கு அம்மாதிரியானவர்கள், இருக்கிறார்கள்.

மாந்தோப்பு இருக்கிறது அதற்கு மாந்தோப்பு என்று பெயர் சொல்லப்படுகிறது. அங்கு இரண்டு புளிய மரங்களும் ஒரு வேப்பமரமும், இரண்டு ஈச்சமரமும் இருக்கிறது. மாமரங்களும் அதிகமிருக்கிறது, ஆனால், புளியமரங்கள் இரண்டும், ஒரு ஈச்ச மரமும் ஒரு வேப்ப மரமும் இருப்பதால் மாந்தோப்பு என்பதை மாற்ற முடியுமா? மாமரங்களோடு மற்ற மரங்களும் இருப்பதால் எப்படி மாந்தோப்பு என்று கூறுவது என்று கேட்கப்படுமானால், அது அறிவுடைமையாகுமா?

அதேபோல் புளியந்தோப்பு என்று பெயரிட்டு அழைக்கும் ஒரு தோப்பு இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம்!

அங்கு ஓரிரண்டு வேறு மரங்கள் இருந்தால் அந்தப் பெயரை மாற்றமுடியுமா?

இங்கே வெற்றிலைப் பாக்குக் கடை இருக்கிறது. இந்தக் கடைக்கு வெற்றிப்பாக்குக் கடை என்று பெயர். இதில் சிகரெட்டு பீடி போன்ற சாமான்கள் இருப்பதால் அந்த பெயரை மாற்ற முடியுமா? அது பொருத்தமாகுமா? பல சரக்குக்கடை ஒன்று இருக்கிறது! அங்கு பல சரக்குகள் இருக்கிறது. பழம் இருக்கிறது. வெற்றிலை பாக்கு இருக்கிறது. வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறதென்றால் கோபப்படுகிறார்கள். ஏன் சொல்லுகிறோம்.

வடக்கில் பாம்பு கடிக்கிறது, தேள் கடிக்கிறது, இங்கும் பாம்பு கடிக்கிறது, தேள் கடிக்கிறது. ஆனால், இங்கு பாம்பு கடித்தால், தேள் கடித்தால் மருந்து இல்லை. அங்கு மருந்து இருக்கிறது.

அங்கு மேஸ்திரியாக இருப்பவன் சூப்ரவைஸராகி, இன்ஜினியராகி விடுகிறான்.

அங்கு கான்ஸ்டேபிளாக இருப்பவன், எட்கான்ஸ்டேபிளாகி, சப் இன்பெக்ட்டராகி விடுகிறான்.

ஆனால் இங்கு மேஸ்திரியாக் இருப்பவன் கட்டிடம் கட்டுபவனாகி விடுவான், கான்ஸ்டேபிள் வேலை இழந்து விடுவான்.

இங்கு இருப்பவர்கள் இதெல்லாம் தெரியாதவர்களல்ல! மற்ற ராஜ்யங்களில் உள்ளவர்கள் தட்டிக் கேட்பார்கள் நேருவிடம் போய் சண்டை போடுவார்கள். இங்குள்ளவர்களுக்கு அதிகாரம் கிடையாது! அங்கே அதிகாரமிருக்கிறது! டில்லியிலுள்ள நேருவிடம் சென்றுகேட்பதற்கே பயப்படுவார்கள்! அவருக்கு கோபம் வந்து விடுமோ என்று அஞ்சுகிறார்கள்! இவர்கள் அவரிடம் சென்று பேசுவதற்கே நடுங்குகின்றவர்கள்!

நாம் அங்கு சென்று பார்க்காது எதையும் கூறுகிறோம் எனறு கூறுகிறார்கள்! பார்ப்பதில் ஒவ்வொருவருடைய கண்ணோட்டம் ஒவ்வொரு விதமாக இருக்கும்!

நாம் ஒரு ஓட்டலுக்குச் செல்கிறோம் என்று வைத்துக்கொள்வோம், அங்கு நாம் போய் என்ன பார்ப்போம்? இட்டிலி வடை முதலியவைகள் இருக்கிறதா? சூடாக இருக்கிறதா என்று பார்ப்போம்.

அதே ஓட்டலுக்கு ஒருசேனிட்டேரி இன்ஸ்பெகடர் வந்தால் எதைப் பார்ப்பார்? அவர் சாக்கடை சரியாக இருக்கிறதா? பாத்திரங்கள் கழுவுவதற்கு வசதிகள் இருக்கிறதா? என்று பார்ப்பார்!

சுகாதார வசதிகள் இருக்கிறதா என்று பார்ப்பவர் அதே போன்று தான் அவருடைய கண்ணோட்டம் அங்கு தான் செல்லும்! அதே போன்று தான், நாம் அங்கு சென்று அங்குள்ள நிலைமைகளையும், செழிப்புகளையும், அபிவிருத்திகளையும் பார்க்கிறோம்! இங்குள்ள வறுமைகளையும். நிலைமைகளையும் ஒன்று படுத்தி பார்க்கிறோம்! பார்ப்பவர்களுடைய கண்ணோட்டம் ஒவ்வொருக்கு ஒவ்வொன்றாக இருக்கும் அதை விட்டு நாங்கள் பார்த்தோம் எங்கள் கண்களுக்குத் தெரியவில்லை என்று கூறினால் என்ன அர்த்தம்!

சென்னை நகர மன்றத்திற்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவு செய்வதற்குத் தான் அதிகாரம் இருக்கிறது. சென்னை சர்க்காருக்கு ஒரு கோடிரூபாய்கள் வரை செலவு செய்யும் அதிகாரம் தான் இருக்கிறது, இவர்கள் ஏதாவது திட்டங்களோ, அபிவிருத்திகளோ செய்வதென்றால் இவர்கள் செய்ய முடியாது, வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க இங்கு தொழிற்சாலை நிறுவ வேண்டுமானால் இவர்களால் முடியாது.

டில்லி சர்க்காரிடம் அனுமதி பெற்றுத் தான் செய்ய முடியும், நாம் இப்படி சொல்லுகிறோம் என்பதால் மந்திரி காமராஜ், சுப்பிரமணியம், பக்தவத்சலம் இவர்களுக்கு வெட்கம் வந்து, ஓர் இரவு அவர்கள் மனதில் ஒரு தொழிற்சாலை நிறுவ வேண்டுமென்ற எண்ணம் உதித்து நிறுவ எண்ணி முடிவு செய்தால் இவர்களால் முடியாது.

இந்த உங்களிடம் விசித்திரமான செய்தி ஒன்றைக் கூற ஆசைப்படுகிறேன்!

ஆந்திராவிலிருந்து தண்ணீர் கொண்டு வர ஆரணி ஆற்றுத் திட்டம் என்று ஒன்று போட்டார்கள். அதற்கு ஒருகோடியே 85 லட்சம் செலவாகு மென்று அதிகாரிகள் கூறினார்கள். அப்படி செய்ய வேண்டுமானால். டில்லியில் உத்திரவு பெறவேண்டும், ஏனெனில் அதிகாரம் அவர்களிடம் இருக்கிறது இவர்களுக்கு அங்குபோய் கேட்க பயம் ஒரு கோடியைக் குறைத்து 85 ஆயிரத்திற்குத் திட்டம் போட்டார்கள்! ஆனால் அதற்கு மேல் செலவாகி விட்டது, இப்போது வேலை நின்றிருக்கிறது. இது மாதிரி பல இருக்கிறது. உதாரணத்திற்காகஒன்று கூறினேன்.

பெரிய திட்டங்கள் போடுவதற்கு இவர்களுக்கு அதிகாரமே கிடையாது.

சென்னைசர்க்கார் ஒருகோடிக்கு மேல் செலவு செய்ய முடியாது! அதற்கு மேல் செலவு செய்ய வேண்டுமானால் டில்லியைத் தான் கேட்க வேண்டும்,

சென்னை நகர மன்றத்திற்கு 2 லட்சம் ரூபாயும், 8 மந்திரிகள் உள்ள ஒரு சர்க்காருக்கு, ஒருகோடிரூபாய்க்குமேல்செலவு செய்யவும் முடியாது.

இவர்களுக்கு மேல் பெரிய சர்க்கார் டில்லியிலிருக்கிறது.

சென்னை சர்க்கார் சின்ன சர்க்கார்! நாம் இதைக் கூறினால் பயப்படுகிறார்கள். நாம் அரசியலைக் கைப்பற்றிவிடுவோம்என்று அஞ்சுகிறார்கள், நாம் ஒரு காரியத்திற்கு மக்களின் நன்மைக்காக அரசியல் கட்சிகள் ஒன்று சேர வேண்டுமென்று கூறினால் நம்மை கேலி செய்கிறார்கள். மாநில சர்க்காருக்கு அதிகாரம் இருக்க வேண்டு மென்று கூறி எதிர்க்கட்சிகள் ஒன்று சேர வேண்டு மென்று கேட்டால், நையாண்டி செய்கிறார்கள். நாம் அதிகாரத்தைக் கைப்பற்றவே இது செய்கிறோம் என்று நினைக்கிறார்கள். அந்த பயம் அவர்களுக்குத் தேவை இல்லை. அதனால் நமக்குப் பதவி ஆசை இல்லை யென்ற அர்த்தமில்லை ஆனாலும்நமக்கு இருக்கின்றஒரே ஒரு நோக்கம் நமது நாடு விடுதலை அடைய வேண்டும், நம் நாட்டு மக்களுக்கு நல்ல வாழ்வு கிடைக்க வேண்டும்என்பது தான்! அதுவருவதற்கு யார் பதவிக்கு வருவதாக இருந்தாலும் நமக்கு அக்கரை இல்லை. நம்முடைய எண்ணங்கள் நிறைவேறி விட்டால்போதும், நாங்கள் வருவோம்என்ற அச்சம்வேண்டாம். நான் உறுதியாகக் கூறுகிறேன். எழுதியும் கொடுக்கிறேன் என்னுடைய பரம்பரையே ஆட்சிக்கு வருவதில்லை என்று.

என்னுடைய பரம்பரை 14 தலைமுறைக்கு வருவதில்லை யென்று. நெடுஞ்செழியன் பரம்பரை 8 தலை முறைக்கு வருவதில்லை யென்று.

கக்கன் பரம்பரை 25 தலை முறைக்கு வரட்டும்! மந்திரி சுப்பிரமணியம் பரம்பரை தொடர்ந்து வரட்டும், மந்திரி பக்தவத்சலம் பரம்பரையும் எப்பொழுதுமே வரட்டும். இதற்குச் சம்மதமா?

மந்திரி காமராசரை சொல்லவில்லை யென்று எண்ணுகிறீர்களா? அவருக்குத் தான் பரம்பரை என்று கூற தொடர்பு சொந்தம்—பந்தம் இல்லையே.

அதிகாரமில்லாத ஆட்சியை வைத்து அதில் ஆள்வது, உப்பில்லாத சாப்பாடு சாப்பிடுவதற்கு ஒப்பாகும்!

(9-ம் பக்கம் பார்க்க)

# கழகத்தை நடத்திச் செல்லும் பெரும் பொறுப்பையும் மகளிர் ஏற்றுக் கொள்ள வேண்டும்!

## மகளிர் மன்ற பொங்கல் விழாவில் அறிஞர் அண்ணா வேண்டுகோள்!

மகளிர் மன்றத்தின் பொங்கல் விழா கடந்த 23—1—60 தேதியன்று கோடம்பாக்கம் எம், ஜி. ஆர். திடலில் நடைபெற்றது!

அன்று மாலை மூன்று மணியிலிருந்து மகளிர் மன்றத்தினர் பல விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்தினர். இதில் பெரும்பாலும் மகளிர் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்!

விளையாட்டு நிகழ்ச்சிக்குப் பிறகு மாலை 6 மணி அளவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது! கூட்டத்தில் ஜி. கஸ்தூரி இயக்கப் பாடல்களை பாடினர். பின்னர் கஜகர்ணம்-வரலக்ஷ்மி இருவரும் நகைச்சுவை விருந்தளித்தனர், சிறுமி நிழபாவின் உடற்பயிற்சி நடைபெற்றது

கூட்டத்திற்கு சட்ட மன்ற உறுப்பினர் டாக்டர் சத்தியவாணி முத்து தலைமை வகித்தார். அவர் தலைமை உரையில் பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகம் விடுதலை போராட்டம் நடத்துமேயானால் மகளிர் மன்றம் அந்தப் போராட்டத்தில் பங்கு கொண்டு செயலாற்றும் என்று கூறினார்.

பின்னர் மேயர் திரு. அப்துல் காதர் அவர்களுக்கும், துணை மேயர் தேவராசன் அவர்களுக்கும் மகளிர் மன்றத்தின் சார்பில் பாராட்டு இதழ் வாசித்தளிக்கப்பட்டது!

மேயர், துணை மேயரைப் பாராட்டி தோழியர்கள் மலர் மகள் பி. ஏ., சாரதா தேவி, வெற்றிச் செல்வி அன்பழகன், இராணி அண்ணாதுரை, நகராட்சி மன்ற உறுப்பினர் சா. கணேசன், தோழர் குடந்தை சலாம் ஆகியோர் பேசினர்.

துணை மேயர் திரு, தேவராசன் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். மேயர் அப்துல்காதர் அவர்கள் நன்றி தெரிவித்துப்பேசுகையில் மகளிர் மன்றத்தினர் பொதுநலத் தொண்டில் ஈடுபாடு கொள்ள வேண்டுமென்றும், குடிசை வாழ் வார் பகுதிக்குச் சென்று சுகாதாரமாக வாழவேண்டிய முறைகளைப் பற்றி பிரச்சாரம் செய்கிற பணியிலே ஈடுபாடு கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

### அரங்கண்ணல்

பின்னர் தோழர் இராம. அரங்கண்ணல் அவர்கள் பேசினார்கள். அவர் பேசியதாவது; —

அன்புள்ள தலைவர் அவர்களே! அருமை தாய்மார்களே! தோழர்களே!

இன்றைய தினம் நம் தாய்க்குலத்தினர் கொண்டாடும் விழாவிலே கலந்து கொள்ளுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மாலை மூன்று மணியிலே இருந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளை நீங்கள் அறிவீர்கள். மகளிர் மன்ற தோழியர்கள் அமைத்திருந்த விழா சிறப்புகளை!

நமக்கு பொங்கல் திருநாளில் இல்லங்களிலே பல்சுவை விருந்து தந்து மகிழ்ச்சி அளித்த தாய்மார்கள் இன்று அளித்திடும் விருந்து காலந் தாழ்ந்த விருந்து என்று நீங்கள் எண்ணலாம். பொங்கல் கழித்து இம் மன்றத்தினர் கொண்டாடுகிறார்களே! என்ற ஐயம் உங்களில் சிலருக்கு ஏற்படக்கூடும்,

பொங்கல் தினத்தன்றே கொண்டாடி இருந்தால் சிறப்பாக இருந்திருக்கும், ஆனந்தம் மிகுதியாக ஏற்படக்கூடும்!

ஆனால் மகளிர் இப்படி அதிகமாக கூட முடியாது. காரணம், பொங்கல் தினத்தன்று ஏராளமான பணி தாய்மார்களுக்கு இருக்கிறது! நமக்கெல்லாம் சுவையான விருந்து அளித்த பிறகு, அவர்களுக்கு அந்தக் களைப்பு நீங்கிய பிறகு, இந்த மகிழ்ச்சி விருந்தை நமக்களித்திருக்கிறார்கள்.

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக சார்பில் இந்த ஆண்டு திராவிடர் திருநாளில் சிறப்பான வகையில் கொண்டாடாமல் தென் சென்னை மகளிர் மன்றத்தினருக்கு திராவிடர் திருநாளை கொண்டாடுகின்ற வாய்ப்பை அளித்திருக்கிறார்கள் அந்த வாய்ப்பை பயன் படுத்திக் கொண்டு இவ்விழாவை சிறப்பான விழாவாக்கியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்குள்ள பல சார்பு மன்றம் பணியாற்றி வருகிறது.

இதிலே யார். யார் இருக்கிறார்கள். இவர்கள் எடுத்துக் கொண்ட காரியம் என்ன? என்னென்ன இம்மன்றத்தினர் செய்கிறார்கள் என்று கேட்கக்கூடும்.

தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் மகளிர் மன்றத்தை நிலை நிறுத்த பாடுபட்டு வருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எத்தகைய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும், திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் இதயத்திலே எப்படிப் பட்ட செல்வாக்கு பெற்றிருக்கிறது, என்பதையும் காணுகின்ற மாற்றுக் கட்சிக்காரர்கள் கேலி மொழி பேசுகின்றனர்.

நம்மிலே மாணவர்கள் இருக்கிறார்கள். நம்மிலே கலைஞர்கள் இருக்கிறார்கள். தொண்டுள்ளம் பெற்ற அதிகாரிகள் நமக்கு ஆதரவு தருகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்ததோர் விருட்சம், அந்த விருட்சத்தின் கிளையிலே குயில் இருக்கிறது. வானம்பாடி இருக்கிறது. குயில் பாடி களிக்கிறது. பேசி களிக்க வானம் பாடி இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகமென்னும் விருட்சத்தை வளர்க்க வானம்பாடி தன் அலகால் குளம், குட்டையிலே இருந்து தண்ணீர் எடுத்து வந்து ஊற்றுகிறது, விருட்சத்தைக் காப்பாற்றுவதற்கு வேலி போடுவதற்காக புளு சுள்ளிகளை எடுத்து வைத்து வேலி அமைக்கிறது.

இப்படித்தான் நம் கழகத்திலே இருக்கின்றவர்கள் எல்லாம், தங்களால் இயன்ற அளவு கட்டிக் காக்கிறார்கள்.

அப்படித்தான் தாய்மார்கள் நல்ல உணர்ச்சியோடு கடமையாற்றுகிறார்கள், நாம் அதை மறந்துவிடக் கூடாது!

திராவிட முன்னேற்றக் கழகம் இடுகின்ற கட்டளையை நிறைவேற்ற, அதற்காக தங்கள் வாழ்வை தத்தம் செய்துவிடக்கூள் உரைக்கின்ற தோழர்கள் ஆயிரமாயிரம் பேர் இருக்கிறார்கள். இது போதுமா? போதாது!

காங்கிரஸ் சீரழிந்த கட்சி என்பதை நாமெல்லாம் ஒப்புக் கொள்கிறோம். ஆச்சாரியார், நாம் சூட்டாத பட்டத்தை காங்கிரசுக்கு சூட்டுகிறார். நாம் காங்கிரசை வெளியே இருந்து தான் பார்த்திருக்கிறோம். ஆச்சாரியார் காந்தியோடு கலந்து பேசி பழக்கப்பட்டவர், நேருவோடு இருந்தவர், காங்கிரசில் முதல் மந்திரியாக இருந்தவர் ஆச்சாரியார். காங்கிரசில் கவர்னர் ஜெனரலாக இருந்தவர் ஆச்சாரியார். அந்த ஆச்சாரியார்தான் காங்கிரசை அயோக்கியர்கள் கூடாரம் என்கிறார். இப்படிச் சொன்னது ஆச்சாரியார்... அண்ணாதுரை அல்ல!

காங்கிரசிலே இருக்கும் மந்திரிகளைப்பற்றி கூறும்போது அத்தனைப்பேரும் அயோக்கியர்கள் என்கிறார். நாட்டு மக்களை வடக்கிற்கு காட்டிக் கொடுத்து வாழ்கிறார்கள் என்கிறார். வேட்டையாடுவது போல மக்களை வேட்டையாடி, காங்கிரஸ் அழிவுப் பாதயில் போய்க் கொண்டிருக்கிறது என்கிறார்.

காங்கிரசிலே தியாக எண்ணம் பிறக்க வேண்டும். அழிவுப் பாதையிலே இருந்து மாற வேண்டும் என்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி நடைபோடுகிறது! மாற்றார் மருளுகின்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறோம் என்பதை ஒப்புக்கொள்கிறோம், காங்கிரஸ் கட்சியின் ஆரம்ப வளர்ச்சியைப் பற்றி யோசிக்க வேண்டும். மகளிர்களின் ஆதரவு காங்கிரசுக்கு இருந்தது. காங்கிரசில் கொடி தூக்கி, உயிர் நீத்த தாய்மார்கள் ஏராளம். கவிக்குயில் சரோஜினிதேவி, கஸ்தூரி பாய், கல்பனாதத் போன்றவர்கள் காங்கிரஸ் நடத்திய போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டார்கள். நாம் அவர்களை மறந்து விடக்கூடாது.

கழகத் தோழர்களின் துணைவியர்களும், தமிழகத் தலைவர்களின் துணைவியரும், மகளிர் மன்றத்தினரும் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகின்ற அறப்போராட்டத்திற்கு துணை நின்று போராடுகின்ற கட்டம் வருமானால் தாயகம் விடுதலை பெறும். பொங்கல் மலரும், திராவிடரின் வாழ்வு மலரும் என்று கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்" என்று கூறி முடித்தார்.

### கலைஞர் மு. கருணாநிதி

அடுத்து கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பேசுகையில் பொங்கல் விழா சிறப்புகள் குறித்தும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல் பற்றியும் பேசினார்.

(கருணாநிதி ஆற்றிய முழு பேச்சு இந்த இதழில் 10ம் பக்கத்திலும் 11ம் பக்கத்திலும் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது!)

### பரிசு

மகளிர் மன்றத்தினர் நடத்திய விளையாட்டு நிகழ்ச்சியில் பங்கு கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் பரிசு கொடுத்தார்.

### கவிஞர் கண்ணதாசன்

அடுத்து கவிஞர் கண்ணதாசன் பேசினார். அவர் பேசியதாவது—

அன்பு கெழுமிய தலைவரவர்களே, நண்பர்களே, தாய்மார்களே!

(6-ம் பக்கம் பார்க்க)

# மத அடிப்படையில் அமைக்கப்படாத ஒரே ஒரு விழா பொங்கல் பெரு விழாவாகும் !

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மகளிர் மன்றத்தினர் நடத்துகின்ற பொங்கல் விழாவிலே கலந்து கொள்ளுகின்ற வாய்ப்பு கிட்டியமைக்கு உண்மையிலேயே பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்!

காலையிலே இருந்து நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை பார்த்தீர்கள்! மகளிர் மன்றத்தினர் சீரிய முறையில் இவ்விழாவை கொண்டாடி யிருக்கின்றனர்!

பொங்கல் விழாவை, குறிப்பிட்ட தினத்தன்று தான் கொண்டாட வேண்டுமென்பது ஒன்றுமில்லை. தை மாதம் முழுவதிலும் பொங்கல்விழா கொண்டாடலாம். இந்த அளவு சிறப்பாக எம். ஜி. ஆர். மைதானத்தில் மகளிர் மன்றத்தினர் அமைத்திருக்கிறார்கள்!

தை மாதத்தில் தான் தமிழ் ஆண்டு பிறக்கிறது! தமிழர்களின் வாழ்வும் தை மாதத்தில் தான் துவங்குகிறது! பல நாள் உழைத்து, உழைத்த உழைப்பை அனுபவிக்கிற நாள் பொங்கல் திருநாள். அறுவடை செய்து வாழ்க்கையிலே இன்பம் பொங்க—வீட்டில் பொங்கல் வைக்கின்ற நாள், தைப் பொங்கல் திருநாள்!

மத அடிப்படையில் அமைக்கப்படாத ஒரே ஒரு திருநாள், பொங்கற் திருநாள்! மகளிர் மன்றத்தினர் நடத்திய கயிறு இழுப்பு போட்டியின் வெற்றி தோல்வி பற்றி நண்பர் கருணாநிதி அவர்கள் எடுத்துக் கூறினார்கள்,

நாட்டிற்குள்ளே பல அரசியல் கட்சிகள் இருக்கின்றன! அவை அத்தனையும்பொங்கல் விழாவை கொண்டாடுகின்றன,

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மகளிர் மன்றத்தினர், கிராமங்களிலே கொண்டாடும் பொங்கல் விழாவைப் போலவே, நகரங்களில் கொண்டாடும் பொங்கலை இந்த மைதானத்தில் கொண்டாடுகிறார்கள்.

கிராமங்களில் இந்தப் பொங்கல் திருநாளில் மஞ்சு விரட்டு என்னும் விழாவையும் கொண்டாடுவார்கள். இதில் பல வாலிபர்கள் காளைகளை அடக்க முயல்வார்கள். வீரத்தை வெளிக்காட்டும் விழாவாக அது அமையும்!

இந்த ஒரு திருவிழா தான், மக்களின் வாழ்க்கையிலே சிக்கலை உண்டாக்காத விழா!

உழைப்பின் பயனை அனுபவிக்கிறோம்! பயன் பெறுவதற்காக உழைத்த மாடுகளை பாராட்டவும்—பொங்கலுக்கு அடுத்தநாள் மாட்டுப் பொங்கல் என்று வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படை இலக்கணமாய் அமைந்தது தான் பொங்கல் திருநாள்! உழுதவனை வாழ்த்துகிறோம். உழைப்பதற்கு உதவிய மாடுகளை பாராட்டுகிறோம்!

பொங்கல் திருநாளை பர்மாவிலே இருக்கின்ற தமிழன் கொண்டாடுகிறான். மலேயா, சிங்கப்பூரிலே இருக்கும் தமிழன் கொண்டாடுகிறான், இலங்கையிலே இருக்கும் தமிழன் கொண்டாடுகிறான், உலகெங்கும், உலகத்தில் எந்த மூலையில் தமிழர்கள் இருந்தாலும் அங்கெல்லாம் இந்தத் தமிழர் விழாவை, திராவிடர் விழாவை கொண்டாடுகிறார்கள். பொங்கல் திருவிழா நமக்கு தேசியத் திருவிழாவாக அமைந்திருக்கிறது! இடையிலே வந்த தீபாவளி விழாவின் அடிப்படை பண்பாடு நமக்கு ஒத்துவரவில்லை!

விஞ்ஞானம் வளர்ச்சி பெறாத காலத்திலும், வெள்ளைக்காரன் இந்த நாட்டில் காலடி எடுத்து வைக்காத காலத்திலும், இன்று போல் துரித வாகனவசதி இல்லாதகாலத்திலும் ஈடுஇணையற்ற விழாவாக, மாடு பிடிக்கும் வீர விளையாட்டு கொண்டாடுகிற விழாவாக, உழுதவனை பாராட்டும் விழாவாக, ஏழைகளை வாழ்விக்கும் விழாவாக அமைந்திருந்தது!

இன்று பொங்கல் விழா கொண்டாடுகிற போது, மனதிலே ஏதோ இருள் கப்பிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இப்போது மனதிலே சூழ்ந்திருக்கும் பயம், முன்னால் இருந்த தைரியத்தை — பலஹீனத்தால் வீர விளையாட்டுகள் ஒழிந்தன!

பலஹீனம் ஏற்பட்டு, சூழ்ச்சிக்கும் சதிக்கும் இடையே சிக்கித்தவிக்கும் இந்த நிலையிலே தான் பொங்கல் விழாவை கொண்டாடுகிறோம்!

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பொங்கல் விழா கொண்டாடினோம். அப்போது அரிசி விலை ஆறரையணா! அன்று கொண்டாடியப் பொங்கல், உற்சாகப் பொங்கலாக இருந்தது.

வெள்ளைக்காரனுக்கு அடிமையாக இருந்த போது கொண்டாடிய பொங்கல் திருநாளில் ஏற்பட்ட மகிழ்ச்சி, சுதந்திரம் கிடைத்த பின் கொண்டாடும் பொங்கல் விழாவில் மகிழ்ச்சி இல்லை!

சுதந்திரம் அடைந்த பிறகு எந்த நாடும் இப்படி வீழ்ச்சி பெற்றதில்லை. சுதந்திரம் வாங்குகின்ற போதே, நிழல் போல தரித்திரமும் வந்து சேர்ந்தது! இங்கே பாராளுமன்றத்திலே வீற்றிருக்கும் மந்திரிமார்கள், எந்தெந்த நாடுகளை கடன் கேட்கலாம்! கேட்டால் கடன் கிடைக்குமா, கிடைக்காதா என்று பேசிக் கொண்டிருக்கின்றனர்.

டென்மார்க்கிலே இருந்து கடன் வாங்குகிறார்கள். ஐ. நா. விலே போய் கடன் வாங்குகிறார்கள். பணம் வந்தால் என்ன செய்கிறார்கள். பெங்களூரில் மாநாடு நடத்தியது போன்று பல மாகாணங்களில் மாநாடு நடத்தி வீண் விரயம் செய்கிறார்கள்!

திராவிடர்களின் வாழ்க்கையிலேயும், பொருளாதாரத்தில் புதிய வாழ்வு பெற வேண்டுமானால் சுதந்திரப் பொங்கல் பொங்க வேண்டும்!

ஹோலிப் பண்டிகையிலே அவர்களுக்கு உற்சாகம் இருக்கிறது. பொங்கல் விழாவிலே, அவர்களுக்குள்ள உற்சாகம் நமக்கு இல்லை!

பொங்கல் விழாவை பூரிப்போடு கொண்டாட எத்தனை பேருக்கு முடிகிறது?

நாம் இழந்த வாழ்வை மீண்டும் பெற வேண்டும். இங்கே இருந்து வரிப் பணத்தை கொள்ளைகொள்ளையாக மத்திய சர்க்காருக்கு கொட்டியழுவதை தடுக்க வேண்டும். இங்கே கிடைக்கின்ற பணம், இந்த நாட்டு மக்களுக்கே செலவழிக்கப்பட வேண்டும்!

வடக்கே இருப்பவர்களுக்கோ இரக்கமில்லை. ஆனால் இங்கிருக்கும் மந்திரிகள் இரக்கப்படுகிறார்கள். வடநாட்டினர் மீது இரக்கப்படுகின்ற நிலை ஒழிந்தாலன்றி தெற்கே இருப்பவனுக்கு உறக்கம் கலையாது! ஆகவே நமது தாயகத்தை, திராவிடத்தை மீட்க மீண்டுமென்று கேட்டுக் கொண்டு விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பளித்த மகளிர் மன்றத்தினருக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்!

## புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

அடுத்து புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் பேசினார். அவர் பேசுகையில்,

"மகளிர் மன்றத்தைச் சார்ந்தவர்கள் பூரிப்போடு தியாகத்தீயில் குதித்து, திராவிட நாடு கோரிக்கை வெற்றி பெற போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

தாய்மார்கள் குடும்பத்தைக் கட்டிக் காப்பது போல், நாட்டைக் காக்கும் பெரும் பணியிலும் ஈடுபட வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், காங்கிரஸ் மக்களிடத்திலே பெற்றிருந்த செல்வாக்கை இழந்து விட்டதென்றும், திராவிட நாடு லட்சியம் வெற்றி பெற வேண்டுமானால் மகளிர் மன்றத்தைச் சார்ந்தவர்கள் நாட்டு மக்களிடையே பயனுள்ளவகையில் பணியாற்ற வேண்டும், அதற்கான நல்ல அமைப்பாக இம்மன்றத்தை ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று கூறினார்.

இறுதியில் அறிஞர் அண்ணா அவர்கள் மகளிர் மன்றத்தைப் பாராட்டிப் பேசினார்.

## அறிஞர் அண்ணா

அன்புள்ள தலைவரவர்களே, அருமை நண்பர்களே!

மகளிர் மன்றத்தார் நடத்துகின்ற இந்த தமிழர் திருநாளில் நீங்கள் இப்படி உற்சாகத்தோடு இருந்து மிக்க குதூகலமடைந்திருக்கிறீர்கள். இந்த விழாவினை சிறப்பாக அமைத்திருக்கும் மகளிர் மன்றத்தாரை நான் பாராட்டுகிறேன்!

விழா முடிகின்ற இறுதி கட்டத்தில் உங்களிடத்தில் பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு மெத்த மகிழ்ச்சி அடைகிறேன்!

இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளை கண்ட போது எனக்கு கொஞ்சம் பொறாமையாகவே இருந்தது. பொங்கல் திருவிழாவில் எங்களால் பெற முடியாத பாராட்டையும், பெருமையையும் மகளிர் மன்றத்தார் பெற்று விட்டார்கள் என்பதை நினைக்கின்ற போது ஒரு புறம் மகிழ்ச்சி. மற்றொரு புறம்

(7-ம் பக்கம் பார்க்க)

இப்போது பெரிய அளவில் வெளிவருகிறது!
கலைமணம் கமழும் திரை ஏடு!

**கலைச் சோலை**

(மாதமிருமுறை)

13 காசு 8 பக்கங்கள்

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு முன் பணம் செலுத்தும் விற்பனையாளர்கள் தேவை.

நிர்வாகி :
"கலைச் சோலை" சென்னை-14.

சோவியத் கூட்டாட்சித் தலைவர்

## மேன்மைமிகு கே. இ. வரோஷிலாவ்,

## மாண்புமிக்க கோஸ்லோவ் ★ திருமதி பர்ட்சவா

சென்னை மாநகர்க்கு வருகை தந்தபோழ்து

**சென்னை மாநகராட்சி மன்றத்தினர்**

உவந்தளித்த

# வரவேற்பிதழ்

**சோவியத் ஆட்சியின் மாட்சிமிகு தலைவர்களே!**



இருபதாம் நூற்றுண்டில் இணையற்ற மாறுதலை உண்டாக்கி, உலக வரலாற்றில் முக்கியமானதொரு இடத்தைப் பெற்றுள்ள சோவியத் அமைப்பின் தலைவராக விளங்கும் தங்கள் வருகையால் சென்னை மாநகரம் பெருமிதமும் பூரிப்பும் அடைந்துள்ளது! சென்னை மாநகராட்சி மன்ற மேயர், துணை மேயர், உறுப்பினர்கள் ஆகிய நாங்கள், மாநகர் மக்கள் சார்பில் "வருக! வருக! என நல்வரவு கூறுகிறோம்; வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம்!

தாங்கள் வந்துள்ள இந்தத் தென்னகம் பழம் பெருமை வாய்ந்த திராவிட நாகரீகத்தையும், உயர்தரப் பண்பாட்டையும், வளமான மொழியமைப்பையும், வீரம் செறிந்த நீண்ட வரலாற்றையும் பெற்ற நாடு! இயற்கை எழில் கொஞ்சும் நாடு. இலக்கியச் செல்வம் மிஞ்சும் நாடு! மண் வளமும், மலை வளமும்! கனி வளமும், கலை வளமும், இசையும் கூத்தும், காவியமும் ஓவியமும் மிக்க நாடு. பல்வகை வளமும் பெற்ற இத்தகைய இன்பத் திருநாட்டுக்கு வருகை தந்துள்ள தங்களை பேருவகையுடன் வரவேற்கிறோம்!

சோவியத் கூட்டாட்சியின் தலைவர்களாக விளங்கும் தங்களை வரவேற்கிற பொழுது, தங்கள் நாட்டு மக்கள் ஆற்றியுள்ள அரும்பெரும் சாதனைகளும், தங்கள் நாடு அடைந்துள்ள பெருமிதமான முன்னேற்றமும் எங்கள் நினைவுக்கு வருகின்றன! முதல் உலகப் போருக்குப் பின் முளைத்தெழுந்த சோவியத் அமைப்பு இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஒரு உலக சக்தியாகிவிட்டது! மிகக் குறுகிய காலத்தில் வியக்கத்தகு மாறுதல்கள் பல நிகழ்ந்துள்ளன! பாட்டாளி மக்களின் சலியாத ஒத்துழைப்பும் தளராத முயற்சியும் தான் இத்தகைய உயர்நிலைக்கு அடிப்படையாயின! தங்கள் நாட்டு மக்களுக்கு எமது வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் அளிக்கிறோம்!

சோவியத் விஞ்ஞானிகள் உலகம் கண்டு வியக்கும் புதுமைகளைச் செய்துள்ளனர்; சோவியத் விஞ்ஞானம் சந்திர மண்டலத்தையும் எட்டிப் பிடித்துள்ளது! அணுசக்தியின் ஆற்றலும், விஞ்ஞானப் புதுமைகளின் வளர்ச்சியும் உலக மக்களுக்கு ஒரு புறம் ஆச்சரியத்தை அளிக்கின்றன; மறு புறம் அச்சத்தைத் தருகின்றன! போரினல் உண்டாகும் பேரழிவுகளை உணர்ந்து, போருக்கான சூழ்நிலைகளைத் தவிர்க்கவும், போர்ப் படைகளைக் குறைக்கவும், நிலையான அமைதி காணவும், தாங்களும் தங்கள் அரசாங்கமும் எடுத்துக் கொள்ளும் எல்லாவித நல்ல முயற்சிகளுக்கும் இம் மாநகராட்சி மன்றம் தனது மகிழ்ச்சியையும், ஆதரவையும் தெரிவித்துக்கொள்கிறது.

சோவியத் நாட்டிலிருந்து இதற்கு முன்னர் அரசியல் தலைவர்களும் கலை வல்லுநர்களும், தொழில் நுட்ப விற்பன்னர்களும், நல்லெண்ணக் குழுவினரும் தென்னகத்திற்கு வந்துள்ளனர்! அவர்களால் ஏற்படுத்தப்பட்ட நல்ல தொடர்பும், நல்லுறவும் தங்கள் வருகையால் மேலும் பலப்படுத்தப் பட்டுள்ளன! தென்னகத்தின் தொழில் வளர்ச்சிக்குத் தங்கள் நாடு ஓரோர் வகையில் உதவியுள்ளது! தங்கள் நாட்டின் ஒத்துழைப்புடனும், நல்லெண்ணத்துடனும் இங்கு தொழில் வளம் பெருகும் என நாங்கள் நம்புகிறோம்!

"புதுமைகள் பல வளர, போரொழிந்த புத்துலகம் காண; மக்கள் வாழ, அவர்கள் உள்ளங்களில் மகிழ்ச்சி துலங்க, மலைபோல தடுத்து நிற்கும் தடைகளை மீறி இன்ப ஒளி மலர, தாங்களும் தங்கள் நாட்டினரும் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் வெல்க! உலக அமைதி நிலைக்க! மனித குலம் வாழ்க!" என வாழ்த்தி, தகுதி மிகு தங்களை மீண்டும் "வருக! வருக!" என பேருவகையுடன் வரவேற்கிறோம்.

வணக்கம் இங்ஙனம்:

மேயர்,

சென்னை, } துணை மேயர், உறுப்பினர்கள்

31—1—1960. } சென்னை மாநகராட்சி மன்றம்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுமை! இந்த நல்ல மகிழ்ச்சியை அளித்திடும் இவ்விழா, நல்ல காரியங்களுக்கு உறுதுணையாக இருக்கும். இப்படிப்பட்ட நல்ல மகிழ்ச்சியை ஏற்படுத்தி தந்த மகளிர் மன்றத்தாருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் மன்றத்தார் நாட்டு மக்களிடையே தொண்டாற்ற வேண்டும், என்று நண்பர் ராமச்சந்திரன் சொன்னதைப் போல் நாட்டு விடுதலைப் போராட்டத்தில் குடும்பம் குடும்பமாக ஈடுபட வேண்டும். அந்த உறுதியைமகளிர் மன்றத்தார் அளிப்பார்களென்று நம்புகிறேன்.

எம். ஜி. ஆரின் துணைவியார், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு தருகின்ற கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்வாரென்றும் உறுதி அளித்தார் நண்பர் ராமச்சந்திரன். சத்தியவாணி முத்து அவர்கள் மகளிர் மன்றத்தார் நடிப்பதற்கு ஒரு நாடகம் எழுதித் தர வேண்டுமென்று என்னைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் நடிப்பதற்கென்றே ஒரு நாடகம் ஏற்கெனவே இருக்கிறது. அதற்குப் பெயர் 'பாவையின் பயணம்' என்பதாகும். அதை மகளிர் மன்றத்தார் பயன்படுத்திக் கொள்ளலாமென்று இங்கு உறுதி அளிக்கிறேன்!

மகளிர் மன்றத்தினரின் முயற்சி நமக்கெல்லாம் பெருமை தருவதாகும். உண்மையிலேயே பூரிப்பும்,பெருமையும், அடைந்து மெத்தமகிழ்ச்சியிலேதிளைக்கின்ற தனிக் குடும்பமாக நம் இயக்கம் இருக்கிறது! இது தான் எந்த இயக்கத்திற்கும் இல்லாத லட்சணம்!

மகளிர் ஈடுபடுகின்ற எந்தக் காரியமும் சிறப்பாக அமையும், மகளிர் கரம் பட்டால் மணக்கும். தொட்டால் சிறக்கும். மகளிர் ஈடுபாடு கொள்கின்ற விடுதலை இயக்கம் நல்ல பலனை கொடுத்திருக்கிறது. மகளிர் மன்றத்தார் விடுதலை இயக்கத்தின் வளர்ச்சிக்கு, அதன் கொள்கைகளை நாட்டு மக்களிடையே பரப்ப ஆயத்தமாக வேண்டும். திறமையோடு பணியாற்றும் இம்மன்றத்தாருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் சிறந்த பாசறையாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இன்னும் இரண்டு ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தை நடத்திச் செல்லுகின்ற பொதுச் செயலாளர் பதவியிலும் மகளிர் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அதற்கான பணிகளிலே மகளிர் மன்றத்தார் ஏற்றம் பெற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறேன்" என்று கூறி முடித்தார்!

தலைவர் முடிவுரையுடன் விழா இனிது முடிவுற்றது!

# வட நாட்டு சர்க்காருக்கு, நமது அமைச்சர்கள் அடிமைகளாக இருந்து வருகிறார்கள்!

## மத்திய சர்க்காரைத் தட்டிக் கேட்கும் உரிமை மாநில சர்க்கார் பெற வேண்டும்!

## இப்போதுள்ள சுதந்திரம் உண்மையான சுதந்திரமல்ல!

### புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். பேச்சு

சென்னை கொத்தவால் சாவடி தமிழர் விழாக் கமிட்டியின் சார்பில் 24-1-60ம் தேதி மாலை நடைபெற்ற பொங்கல் விழாவில் புரட்சி நடிகர் எம்,ஜி.ராமச்சந்திரன் பேசியது.

அன்புள்ள தலைவர் அவர்களே! சொல்லின் செல்வர் நண்பர் சம்பத் அவர்களே! வி. பி. ராமன் அவர்களே! தாய்மார்களே! நண்பர்களே!

இன்று இந்த விழாவிற்கு அழைத்து, என்னைப் பேசும்படி கேட்டுக் கொண்டதற்கும், பல நிறுவனங்கள் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவித்தற்காக மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன்!

எனக்கு முன் எனது நண்பர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார். நீங்கள் சற்று அமைதியைக் காட்டாததால், கட்டுப்பாட்டைக் கடைப் பிடிக்காததால் பொறுமையாக இல்லாததால் அவர் பேச்சை நிறுத்தி விட்டார்!

ஒரு நல்ல சொற்பொழிவை, நல்ல கருத்துக்களை கேட்க முடியாது, அருமையான சந்தர்ப்பத்தை இழந்தீர்கள். நான் என்ன பேசப் போகிறேன்! நண்பர் சம்பத் அகில இந்தியாவில் நடைபெறும் செய்திகளை அறிவித்திருப்பார், டில்லியில் இருக்கும் நிலைமைகளையும், மற்றும் அரசியலில் இருக்கும், இருந்து வரும் சூழ் நிலைகளைப் பற்றியும் விளக்கி இருப்பார். இந்த வாய்ப்பை இழந்து விட்டீர்கள்.

எப்பொழுதும் கட்டுப்பாடு வேண்டும். ஆவேசமும், ஆத்திரமும், வெறியும், இருக்கக் கூடாது! உங்களால், உங்களது வெறிச் செயலால் எதிரிலேயும், பக்கத்திலேயும், தெரு முனைகளிலும் அமைதியாக, பொறுமையாக அமர்ந்திருக்கும் ஆயிரக் கணக்கான மக்களுக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது! அங்கே இருப்பவர்களெல்லாம் நமது கழகத்தைச் சார்ந்தவர்கள் தான் எண்ணுகிறேன்! எனக்கு முன்னால் உட்கார்ந்திருப்பவர்கள் தான் இந்த வெறிச் செயலைச் செய்திருக்கிறார்கள்! வேதனைப்படுகிறேன் மாற்றார் எல்லாம் இதைக் கண்டு மகிழ்ச்சியடைந்து, நம்மை கேலி செய்வார்கள். நீங்கள் ஆத்திரத்தில் செய்த இந்த செய்கையால் நமது கழகத்திற்குத் தான் பாதகம்! இதை உணர்ந்து நடக்க வேண்டும்!

என்னை நீங்கள் சினிமா நடிகன், நாடக நடிகன் என்ற முறையில் பார்க்க இந்த மாதிரி கூட்டங்களுக்கு வராதீர்கள். அப்படிப்பட்டவர் நாடகக் கொட்டகைகளிலும், சினிமாத் தியேட்டர்களிலும் போய் பாருங்கள்! அல்லது தெருவில் போகும் போது பாருங்கள்! இந்த மாதிரி கூட்டங்களுக்கு நான் வருவது, திராவிட முன்னேற்றக் கழக ஊழியன்? தொண்டன், என்ற முறையிலே தான்! அதை நீங்கள் நன்றாக உணர வேண்டும்! கழகக் கொள்கைகளைத் தாங்கி பணியாற்றும், பணியாற்றிவரும் ஊழியன் என்பதை மறந்து விடாதீர்கள்!

தொண்டர்களும் கட்டுப்பாட்டைக் கடைப் பிடித்து ராணுவ வீரர்களாக இருந்து எதையும் தாங்கும் உள்ளம் படைத்தவர்களாகத் திகழ வேண்டும்! எந்த விதமான நெருக்கடியான கட்டம் வந்தாலும் அதைச் சமாளிக்கும் திறமையும், அதே நேரத்தில் உங்களுக்கு எந்த வித் ஆபத்து நேருமென்று தோன்றினாலும் பொது மக்களுக்கு ஆபத்து வராது பாதுகாக்கும் வலிவும், வீரமும் தைரியமும் வேண்டும்! அப்படிப்பட்ட நிலைக்கு உங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும்! நமது கழகத்தின் எதிர்கால நிகழ்ச்சிகளுக்கு விடுதலை நிகழ்ச்சிகளுக்கு, உங்களைப் போன்ற வீர பட்டாளங்கள் தேவை! அதிகாரிகளையோ, போலீசையோ தாக்கவல்ல. நமது மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகத் தான் இன்று பொங்கல் விழாக் கொண்டாடுகிறோம்! இது நமக்கு ஒரு மகத்தான—மகிழ்ச்சி தரும் விழா-உழைப்பை உயர்த்தும் விழா! ஆனால் இன்றைய நிலையில் இந்தப் பொங்கல் விழா நமது நாட்டில் மகிழ்ச்சியான விழாவாகக் கொண்டாடப்படுகிற விழாவாக இருக்கிறதா? மக்கள் மகிழ்ச்சியான—நிம்மதியான நிலையில் இருக்கிறார்களா? வயிறார உண்பதற்கான நிலைகளும், தரித்திர மற்ற நிலையில் வாழ்வதற்கும் இங்கு சூழ்நிலைகள் இருக்கிறதா? வருடம் பூராவும் உழைத்து உடலலுத்திருக்கும் விவசாயி, உழைத்த பலனை இன்னொருவன் அனுபவிக்க இவன் பட்டினியால்பரிதவிக்கும் நிலையைத் தான் காண்கிறோம்! இந்த நிலையில் எப்படி மகிழ்ச்சியாக இருந்து விழாக் கொண்டாட முடியும்? இந்த நிலை மாற வேண்டும்! அதற்காகவே நமது கழகம் போராடி வருகிறது! நமது நாடு விடுதலை அடைந்து பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் நமது நாட்டு மக்களுக்கு எந்தவிதமான நன்மையும், எந்த விதமான சுகமும் கிடையாது! அதில் நமது அமைச்சர்களுக்கு அக்கரையும் கிடையாது! இன்று நமது நாடு சுதந்திர நாடு என்று சொல்லுகிறார்கள். இங்கு யாருக்குச் சுதந்திரம்? எந்த மக்கள் சுதந்திரமடைந்திருக்கிறார்கள்! இதையெல்லாம் நாம் கேட்டால் நம்மைத் தூற்றுகிறார்கள் நமது அமைச்சாகள், நமது இயக்கத்தையும், நமது தலைவர்களையும் தாக்கிப் பேசி வருகிறார்கள்.

வட நாட்டு சர்க்காருக்கு நமது அமைச்சர்கள் அடிமைகளாக இருந்து வருகிறார்கள், தட்டிக் கேட்பதற்கு திராணியற்றவர்களாக இருக்கிறார்கள். மத்திய சர்க்காரை தட்டிக் கேட்ட ஓமந்தூரார், ஆச்சாரியார் இவர்கள நிலை யென்ன? இப்போது எந்தக் கட்சியிலிருக்கிறார்கள்.

நமது நாடு பிரிந்து, நமது நாட்டிலுள்ள மக்களெல்லாம் நல்ல வாழ்வு வாழ்வதற்கு நாமெல்லாம் பாடுபட வேண்டும், அதற்கான ஆதரவு தர வேண்டும். நமது நாட்டு விடுதலைக்கான எந்தவிதமான தியாகம் செய்யவும், அதற்காக எந்தத் தொல்லைகள் ஏற்கவும் தயாராக இருக்கிறேன்! இங்குள்ள அமைச்சர்கள் தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் துரோகம் செய்கிறார்கள், இந்த நிலையெல்லாம் மாறி ஒரு நல்லாட்சி நிலவ உங்களுடைய ஒத்துழைப்பு வேண்டும், வரும் தேர்தலில் நல்லாதரவு கொடுத்து ஆதரிக்க வேண்டுகிறேன்.

சமீபத்தில் நடை பெற்ற மேயர் தேர்தலில் நமது கழக மேயர் வருவதற்காக, நகரசபை உறுப்பினர்களை யெல்லாம் அடைத்து வைத்து $7\frac{1}{2}$ லட்சம் ரூபாய் நான் செலவு செய்தேன் என்று கூறுகிறார்கள். இது என்ன பைத்தியக்காரத்தனம்—ஒரு மேயருக்காகவா ஏழரை லட்சம் செலவு செய்வோம்! அப்படி ஏழரை லட்சம் ரூபாய் செலவு செய்தால் இந்த அமைச்சரவையை மாற்றி விடுவோமே.

எங்கள் அண்ணா அவர்களை அமைச்சராக அமரவைப் போமே-அதுவல்ல எங்கள்நோக்கம்! எங்களுக்குப் பதவி ஆசையோ, அமைச்சராக வேண்டுமென்ற எண்ணமோ எங்களுக்குக் கிடையாது. எங்கள் நாடு சுதந்திரமாக இருக்க வேண்டும், எங்கள் மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும். நல்ல வளங்களும், வசதிகளும், இயற்கையான நிலைகளும் இருந்தும் வாழவகையற்ற நிலையை யடைந்திருப்பதால் அதை மாற்றப் பாடுபட வேண்டும்! நம்மையும் நமது தலைவர்களையும் நமது கழகத்தையும், கடவுள் இல்லை யென்று கூறுகிறவர்கள் என்றும், நாத்திகர்கள் என்றும், ஒழுக்கத்தைக் கெடுப்பவர்கள் என்றும் கூறுகிறார்கள் அதைப் பற்றிக் கவலைப்படக் கூடாது! நம்முடைய பணி எதுவோ அதை அயராது ஆற்ற வேண்டும்! ஆகவே இவைகளை யெல்லாம் மனதில் வைத்து நமது கழகத்துக்குப் பூரண ஆதரவு தர வேண்டுவதோடு கூட்டம் முடியும் போது அமைதியாகக் கலைய வேண்டும்! பின்னால் இருப்பவர்கள் முன்னால் வர வேண்டுமென்று நினைக்கக் கூடாது! கட்டுப்பாட்டோடும் கடமையோடும் நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, உங்களுக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் கூறி விடைபெறுகிறேன்.

---

## தமிழ் பெரியார்கள் மறைவு

### அப்பாதுரையார் அனுதாபம்

ஜனவரி 30ம் தேதி அன்று தமிழ் எழுத்தாளர் சங்கத்தில், சங்கத் தலைவர் திரு. கா. அப்பாதுரை தலைமையில் சமீபத்தில் காலஞ் சென்ற டாக்டர் சோமசுந்தர பாரதியார் டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் ஆகியோரது மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்க ஒரு கூட்டம் நடை பெற்றது. திரு. அப்பாதுரை, டாக்டர் பாரதியாரும் திரு. பண்டாரத்தாரும் இலக்கிய மாளிகைக்கு இரு தூண்கள் போல் விளங்கினரென்றும் அவர்களது மறைவால் தமிழ் உலகுக்கு நஷ்டம் என்றும் அவர்களது இடத்தை நிரப்பும் பொறுப்பு தமிழ் எழுத்தாளர்களுக்கு உள்ளது என்றும் கூறினார். பாரதியாரது நெஞ்சுரத்தையும், நேர்மைத் திறத்தையும் எடுத்துக் கூறியதோடு வரலாற்றுக் கதைகள் எழுதுவோருக்கு எவ்வகையில் பண்டாரத்தாரின் நூல்கள் பயன்படுகின்றன என்பதையும் விளக்கினார்.

# அதிகாரமில்லாத ஆட்சி உப்பில்லாதப் பண்டம் !

(அண்ணா பேச்சு)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்களுக்கு உப்பில்லாத சாப்பாடு, சாப்பிட முடியாது! எங்களுக்கு சொரணை இருக்கிறது! வயிறும் வலிக்கும் ஆனால் அவர்கள் உப்பில்லாத சாப்பாட்டைச் சாப்பிடத் தான் விரும்புகிறார்கள், ஏனெனில் அவர்களுக்கு சொரணை இல்லை! சூடு இல்லை!

நமது மந்திரிகள் திராவிட நாடு பிரியாது; அந்தப் பேச்சுக்கு மதிப்பில்லை அவர்கள் பேச்சை நம்பாதீர்கள் என்று பேசுகிறார்கள்!

நமது மந்திரிகள் இங்குள்ள எதிர்க்கட்சிகளை மிகவும் கேவலப் படுத்துகிறார்கள்.

நமது மந்திரிகள் நல்ல எதிர்க் கட்சிகள் வேண்டும், அதை வரவேற்கிறோம் என்று போகிற இடங்களிலெல்லாம் பேசுகிறார்கள்! ஆனால் இங்குள்ள எதிர்க் கட்சிகள் எல்லாம் நல்ல கட்சிகள் இல்லையா?

இப்போதுள்ள கட்சிகளுக்கு என்ன குறை எங்களை விட்டு விடுங்கள்!

கம்யூனிஸ்ட்டுக் கட்சியைப் பற்றிக் கூறினால் அது மாஸ்கோ கூலிகள் கொள்கை யற்றவர்கள் அவர்களை நம்ப முடியாது!

நாட்டின் விடுதலைக்காக அரும் பாடுபட்ட ஜெயப்பிரகாஷ்நாராயணனை தலைவராகக் கொண்ட பிரஜா சோசலிஸ்டுக் கட்சியை ஒரு கட்சியா என்று சொல்லுகிறார்கள், அந்தக் கட்சிக்கு என்ன செல்வாக்கு இருக்கிறதென்று கேட்கிறார்கள்,

காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக தமிழகமெங்கும் சுற்றிப் பிரச்சாரம் செய்த பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்களுடைய திராவிடர் கழகத்தை அது கட்சியே இல்லை—அதை மதிப்பவர்களே இல்லை என்று கூறி இழிவாகப் பேசுகிறார்கள்.

தமிழர்களின் எல்லையை நிர்ணயிக்கவும், தமிழர்களின் உரிமைக்காகவும், மத்திய சர்க்காரின் ஆணைக்கு உட்பட்ட மாநில சர்க்கார் நிறுவப் போகிறேன் என்று கூறுகின்ற நண்பர் சிவஞானத்தின் தமிழரசுக் கட்சியை மதிப்பதில்லை! அது தான் போகட்டும் இந்த நாட்டுச் சுதந்திரத்திற்கு அரும்பாடு பட்டவரும், கவர்னர் ஜெனரலாக இருந்தவரும், இந்த நாட்டில் பெரிய அரசியல் வாதி என்று புகழப்பட்டவரும், கண்ணன் கதை எழுதியவரும், கீதையைப் பற்றி ஆராய்ந்தவருமான ஆச்சாரியார் ஒரு புதுக் கட்சியை ஆரம்பித்தார்! இந்த ஆட்சி நல்ல முறையிலில்லை! மக்களின் பாதுகாப்புக்கு வகையில்லை! மக்களின் சுதந்திரத்திற்கு மதிப்பில்லை அதற்காகப் பாடுபடப் போகிறேன் என்று கூறி அக்கட்சிக்கு சுதந்திரக் கட்சி என்று பெயர் வைத்தார் இக்கட்சி ஆளுங் கட்சிக்கு ஒரு எதிர்க்கட்சி யென்றும் கூறினார்!

ஆனால் அந்தக் கட்சியை கண்ட படி ஏசுவதுடன், கேவலமாகப் பேசுவதுடன் அது ஒரு கட்சியே அல்ல என்கிறார்கள்! நேரு கூறுகிறார் அது ஒரு கிழட்டுக் கட்சி என்று, நேரு தன்னை இளைஞன் என்று எண்ணிக் கொண்டு இவ்வாறு கூறுகிறார்கள், அவர்கள் எண்ணம் காங்கிரசைத் தவிர இந்த நாட்டில் வேறு ஒரு கட்சி இருக்கக் கூடாது என்பதே யாகும்!

ஆனால், பேசுவது ஜனநாயகம் செய்கையோ சர்வாதிகாரம் இப்படி எத்தனை நாளைக்கு ஏமாற்றிக் கொண்டிருக்க முடியும்? நான் கூறுகிறேன், உங்களுக்கு தைரியமிருந்தால், நெஞ்சில் உரமிருந்தால், இந்த நாட்டில் காங்கிரசைத் தவிர வேறு கட்சிக்கு இடமில்லை என்று கூறிவிடுங்கள், மனதில் ஒன்றும் செய்கையில் ஒன்றும் செய்து கொண்டிருக்க வேண்டாம்! மக்கள் உங்கள் பித்தலாட்டத்தை உணர்ந்து விட்டார்கள் மறைமுகமாக சர்வாதிகார முறையை கையாள வேண்டாம்! நேர்மையான முறையில் நடந்து கொள்ளுங்கள்!

நமது நாட்டில், பெண்களை ஜவுளிக் கடைக்கு அழைத்துச் சென்றால் பீரோவிலுள்ள எல்லாக் கலர் சேலைகளையும் காட்டி, அந்தக் கலர் எடு, இந்தக் கலர் எடு என்று கூறி, அதாவது காஞ்சீவரம் பட்டுப் புடவை வரைப் பார்த்து விட்டு, புடவைகள் பிடிக்கவில்லை என்று கூறி வெளியில் வந்து விடுவார்கள்! பின் வேறொரு கடைக்குச் செல்வார்கள், அங்கும் எல்லாச் சேலைகளையும் பார்ப்பார்கள்! அங்கும் பிடிக்கவில்லை என்று கூறி வந்து விடுவார்கள்,

இந்த நிலையில்தான் நமது மந்திரிகளும் இங்கிருக்கிற எதிர் கட்சிகளைப் பற்றி கூறு வருவது!

கொள்கைப் பற்றும் நம்பிக்கையும் கொண்டு இந்த நாட்டில் பணியாற்றி வருகிறது நமது கழகம்! சென்ற தேர்தலில் 17 லட்சம் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதால் நம் கழகத்தையும் நம்மையும், நம்மைத் தாக்கி பேசி வருகிறார்கள்! நம்நாடு விடுதலை அடைய வேண்டுமென்று பாடுபடுகிறவர்களை நையாண்டியும். கேலியும் செய்கிறார்கள்.

பொது விஷயத்தில் எல்லா வதிர்க்கட்சிகளும் ஒன்று சேர வேண்டுமென்று கூறி ஒன்று சேர்ந்தோம். நான் கோகலே மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில்—மாநிலங்களுக்கு அதிகாரம் வேண்டு மென்பதற்காக இங்குள்ள எதிர்க்கட்சிகள் ஒன்று சேர வேண்டுமென்றுகேட்டிருந்தேன். அதற்கு நமது மாநில முதலமைச்சர் பத்து நொண்டிகள் ஒன்று சேர்ந்து என்ன செய்து விடுவார்கள் என்று கேலி பேசுகிறார்.

நமது முதன் மந்திரிக்கு இவ்வளவு விவேகம் எப்படி வந்தது என்று ஆச்சர்யப்பட்டேன்! எப்படி இம்மாதிரி உதாரணங்கள் எல்லாம் கூறுகிறாரே என்று நினைத்தேன். பின் கேள்விப் பட்டேன், நேரு இந்த உதாரணம் கூறி பேசியதை ஆங்கிலப் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறதென்று. இதை யாரோ நமது காமராசருக்குப் படித்துக் காட்டி இருக்கிறார்கள், அதைக் கேட்டுக் கொண்டு நாம் சென்னை நகர மேயர் தேர்தலிலும், கோவை நகர மன்ற தேர்தலிலும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதற்கு 10 நொண்டிகள் சேர்ந்து என்ன செய்து விடுவார்கள் என்று கேட்கிறார்.

நொண்டிகளால் ஒன்றும் செய்ய முடியாது தான்! 8 குருடர்கள் உட்கார்ந்திருந்தால் நொண்டிகளால் ஒன்றும் செய்ய முடியாதா? இவர்களுக்குக் கண்தெரியவில்லை என்று கூறுகிறேன். கண்பார்வை மந்தம் என்று சொல்கிறேன். கண்ணில் சதை வளர்ந்திருக்கிறது என்று சொல்கிறேன். கண் ரப்பை வளர்ந்தால் எதிரில் இருப்பவர்கள் தெரியாது. இந்தக் குருடர்கள் செய்யும் காரியங்களை விட நாம் ஒன்றும் செய்யமுடியாதா?

நாம் இங்குள்ள எதிர்கட்சிகளுடன் ஒன்று சேருவதற்குக் கேலிபேசும் இவர்கள் நிலை என்ன? கேரளத்தில் இவர்கள் யோக்கியதை என்ன?

கேரளத்தில் உள்ள எதிர்க் கட்சிகளையெல்லாம் இருகையை விரித்து வா, வா என்று அழைப்பதன் நோக்கம் என்ன? இவர்கள் ஏன் அங்கு ஒன்று சேர்ந்தார்கள்? கேரளத்தில் கம்யூனிஸ்ட்டு கட்சியைத் தோற்கடிக்க மலையாளிகளின் ஜாதி சங்கத்துடனும், முஸ்லீம் லீக்குடனும் ஒன்று சேர்ந்திருக்கிறார்களே இதற்கு என்ன சொல்வது?

இப்படிச் சேர்ந்து வெற்றி பெறுவது தான் நேர்மையா? இது வெட்கக்கேடல்லவா, மதவாதிகளுடனும், ஜாதி வெறியர்களுடனும் பணக்காரர்களுடனும் ஒன்று சேர்ந்து கொள்ளவில்லையா ? இப்படிச் சேர்ந்து தான் தேர்தலில் வெற்றி பெற வேண்டுமா ? கம்யூனிஸ்டுகள் தேர்தலில் தோற்று விடுவதாகவே வைத்துக் கொள்வோம்! இதனால் கம்யூனிஸ்டுகளுக்கு வெட்கமில்லை! ஆனால் காங்கிரசை உலகம் கண்டு சிரிக்கும், இது ஜனநாயகத்தைக் கொலை செய்வதுமாகும் என்று பேசுவார்கள். நம்மை கேலி செய்கிறார்கள்.

சென்னை நகரமன்ற மேயர் தேர்தலில் முஸ்லீம் லீக்கைச் சேர்ந்த அப்துல்சமத் அவர்களை நம்முடன் சேர்த்துக் கொண்டதற்கு பார்—பார் தி.மு. கழகம் முஸ்லீம்களுடன் சேரலாமா? வகுப்பு வாதக் கட்சியுடன் சேரலாமா என்று கேட்டார்கள்.

அப்துல்சமத் இவர்களுடன் சேரலாமா—நாத்திகர்களாயிற்றே ஜாதி இல்லை, மதமில்லை என்பவர்களாயிற்றே, எப்படி சமத் சேர்ந்தார் என்று கேட்டு ஆர்பரித்தார்கள். இவர்கள் இந்தக் கூச்சலையெல்லாம் நாம் பொருட்படுத்தாது நமது வேலைகளைச் செய்து நமது கொள்கைகளைப் பரவச் செய்ய வேண்டும்.

இதையெல்லாம் செய்வதற்கு அவர்கள் ஆதரவெல்லாம் இருக்கிறது. அது போதாது. கொள்கைகள் நிறைவேறினால் மட்டும் போதாது. லட்சியங்கள் வளர்ந்திருக்கிறது. அது நிறைவேற வேண்டுமானால் நமக்குப் பணபலம் வேண்டும். பற்றும், பாசம் இருந்தால் மட்டும் போதாது. கொள்கை வளர்ந்திருக்கிறது. அது மட்டும் போதாது. பணம் இருந்தால் தான் நாம் அவர்களுடன் போட்டியிட முடியும்.

அடுத்த தேர்தலில் ஈடுபட வேண்டுமானால் உங்கள் ஆதரவு மட்டும் இருந்தால் போதாது. பணம் வேண்டும். நீங்களெல்லாம் பணக்காரர்களல்ல. ஏழைகள் என்பதை அறிவேன். பணக்காரர்கள் நமக்குப் பணம் தர மாட்டார்கள். நாம் அவர்களிடம் வாங்க மாட்டோம், நீங்கள் தரும், ஒருகாசு இரண்டு காசுகளைக் கொண்டே பணபலம் பொருந்தியவர்களை எதிர்க்கப் போகிறோம், ஆகவே நீங்கள் உங்களான உதவியைக் கழகத்துக்கு செய்ய வேண்டுகின்றேன் நம்மிடம் சோறு இருக்கிறது. ஆனால் நம்மிடம் நெய் இல்லை. நெய் காங்கிரஸ்காரர்களிடமிருக்கிறது.

ஒரு கரண்டி நெய் ஊற்றி சாப்பிட்டால் கொஞ்சம் நன்றாகச் சாப்பிடலாம். ஆனால் நெய் டின், டின்னாக டன்டன்னாக வைத்திருக்கிறார்கள். அது டால்டா! அது நமக்குக் கிடைக்காது! வெண்ணை காய்ச்சிய நெய் ஒரு கரண்டி கிடைத்தாலும் போதும்!

சோறு என்பது உங்கள் ஆதரவு! நெய் என்பது பணம். பணம் பலம் அங்கிருக்கிறது! அதனால்தான் உங்களிடம்பணம் கேட்கிறேன்! இன்றிலிருந்து அதற்கான பணியிலீடுபடுங்கள் நம்முடைய எதிரிகள் எல்லாபலமும் பொருந்தியவர்கள்! அவர்களை வீழ்த்த வேண்டுமானால் உங்கள் ஆதரவு வேண்டும். ஆகவே இதை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டுமற்றொரு கூட்டத்திற்குபோவதால் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்!

# பூமியைத் தோண்டினுல் தங்கம்! பகைவர்கள் தீண்டினுல் நாமெல்லாம் சிங்கம்!

## பொங்கல் விழாவில் கலைஞர் கருணாநிதி போர் முரசம்!

**மகளிர் மன்றத்தின் பொங்கல் விழாவில் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கலந்து கொண்டு ஆற்றிய சொற்பொழிவு:**

அன்புள்ள தலைவரவர்களே, பெரியோர்களே! இன்றைய மகளிர் மன்ற சார்பில் நடைபெறும் இந்த நல்விழாவில் நானும் கலந்து கொள்ளும் பெரு வாய்ப்பினை அளித்த மகளிர் மன்றத்தாருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்!

இன்று பிற்பகலிலிருந்து எம். ஜி. ஆர். திடலில் நல்ல பல நிகழ்ச்சிகள் நடைபெற்றதைக் கண்டு களித்திருக்கிறீர்கள். இனி மேல் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர், அவர்களும், அறிஞர் அண்ணு அவர்களும் பேச இருக்கிருர்கள். நான் உங்கள் மத்தியிலே சிறிது நேரம் பேசி என் உரையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்!

(கருணாநிதி அவர்கள் சிறிது நேரம் என்று பேசியதும், எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் 'நெடுநேரம் பேச வேண்டும்' என்ருர்.)


பிறகு கருணாநிதி அவர்கள் தொடர்ந்து பேசியபோது—

நண்பர் ராமச்சந்திரன் நெடு நேரம் பேசவேண்டும் என்கிருர். நான் இங்கே நாலரை மணியிலிருந்து இதுவரை இங்கே இந்த விழாவில் கலந்து கொண்டிருக்கிறேன்! அவர் இப்பொழுது தான் வந்திருக்கிருர், ஆகவே அவர் உங்களிடையே நீண்ட நேரம் பேசுவார்!

இன்று நடைபெற்ற நல்ல நிகழ்ச்சியை மகளிர் மன்றத்தினர் பொங்கல் விழா அன்றே நடத்தியிருக்கவேண்டும், மகளிர் மன்றத்தினர் கொண்டாடிய பொங்கல் விழா உள்ளபடியே நம் தாயகத்தில் எழுச்சியையும், மகிழ்ச்சியையும், உண்டாக்கி இருக்கிறது. உணர்ச்சி பொங்கி வழிகின்ற நிகழ்ச்சிகள் பல இங்கே நடைபெற்றன!

இன்று பிற்பகல் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியைக் காண வரும்போது, நிகழ்ச்சிகளை மூன்று மணிக்கு வைத்திருக்கிருர்களே, திடலில் அதிகம் பேர் கூடியிருப்பார்களா என்ற ஐயப்பாடு எனக்கு எழுந்தது! இங்கே ஆயிரக்கணக்கில் ஆண்களும், பெண்களும் கூடியிருப்பது கண்டு உள்ளபடியே நான் பெரிதும் மகிழ்ந்தேன்!

உற்சாகத்தை, உணர்ச்சியை தட்டி யெழுப்பும் பல நிகழ்ச்சிகளைக் கண்டீர்கள். அடுத்த ஆண்டு மகளிர் மன்றத்தார் இந்த பொங்கல் விழாவை, பொங்கல் தினத்திற்கு மறுநாள் கொண்டாடினுல், இன்னும் மகளிர் அதிகமாக கூடுவார்கள்.



இங்கு நடைபெற்ற விளையாட்டு நிகழ்ச்சியில் மன்றத் தலைவர் சத்தியவாணி முத்து அவர்கள் இரண்டு விளையாட்டில் படுதோல்வி அடைந்தார்! இப்படிக் கூறுவது கேலிக்காக அல்ல! வேற்றுமை மனப்பான்மையை எடுத்துக்காட்ட அல்ல! உரிமையோடு இந்த மகிழ்ச்சி திருநாளில், எல்லோரும் மகிழ்ச்சியோடு அளவளாவி, குதூகலத்தை அடைந்த பெருமகிழ்ச்சியில் கூறினேனே தவிர, கேலிக்காக அல்ல, அவர் மனதை புண்படுத்த அல்ல!

நாளெல்லாம் சிந்தனை செய்கிறோம். சிந்தனையை செயலாக்க விடுதலை பெற வேண்டுமென்று ஆர்ப்பரிக்கிற நாம், தாயக மீட்சிக்காக அல்லும், பகலும் அரும்பாடுபடுகிற நாம், ஒரு நாள் கொஞ்சம் மகிழ்ச்சியோடு இருக்க, கூடிக்குலாவ இப்படிப்பட்டக் கொண்டாட்டங்களிலே நாம் கலந்து மகிழ்ந்திருப்பது.

இந்த நாள் விடுதலை போராட்டத்திற்கு விளக்கம் தருவதற்காக அமையவேண்டும். அதற்காகத்தான் இப்படிப்பட்டவிழாக்களை கொண்டாடுவது.

நாற்காலி பிடிப்பு போட்டியிலும், கயிறு இழுப்புப் போட்டியிலும் தோல்வி அடைந்துவிட்டார் சத்தியவாணிமுத்து, என்ருலும், இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற சட்ட சபை நாற்காலி பிடிப்பில் வெற்றி அடைந்தார்! இதை சமாதானத்திற்கு சொல்கிறேன் என்று எண்ணுதீர்கள்,

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் தோல்வி கண்டு துவளாதவர்கள், வெற்றி கண்டு வீராப்பு பேசாதவர்கள், வெற்றிக் களிப்பில் ஆழ்ந்து விடுபவர்கள் அல்ல!

இன்று நடைபெற்ற நாற்காலி—கயிறு இழுப்புப் போட்டியில் எம்.ஜி ராமச்சந்திரனின் துணைவியார் வெற்றி பெற்ருர். வி.என். ஜானகி அவர்கள் விளையாட்டுப் போட்டியிலே, — வீரத்திலே வெற்றிபெற்ருர். கலை உலக மாமணி, புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனின் வீரத்தின் எடுத்துக்காட்டாக வி. என். ஜானகி அவர்கள் வெற்றி பெற்ருர்.

மகிழ்ச்சியோடு கொண்டாடும் இந்த பொங்கல் விழாவில்—

அன்ெருரு நாள் ஆண்ட மறத் தமிழ் மன்னர்களின் பழைய கீர்த்தியை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்!

தாழ்வுற்றிருக்கும் இந்த நிலைமையை போக்கி, புதுப்பித்து திராவிட சமுதாயம் தனி அரசு அமைத்து தனிக் கொடி பறக்க விட்டு தனியாட்சி செய்வதற்கான போராட்டத்திற்கு ஆடவரின்றி மகளிரும் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்!

இன்று பூரிப்போடு பொங்கல் விழா கொண்டாடுகின்ற இதே போல், நம் மூதாதையர்கள் இந்திர விழா என்ற பெயரில் தைத் திருநாளில் விழா கொண்டாடியதாக சிலப்பதிகாரம் கூறுகிறது!

இந்திர விழாவின் பெருமையிலே புராணீகர்கள் பொருமை எண்ணங் கொண்டு இந்திரன் என்னும் கடவுள் பெயராலே நடக்கின்ற நிகழ்ச்சி இந்திர விழா என்று கூறினுர்கள்.

சிலப்பதிகாரத்திலே சொல்லப்பட்ட இந்திர விழா, தேவர் கோன் இந்திரனை குறிப்பதல்ல!

கரிகால் பெரு வளத்தான் என்னும் சோழ மன்னனுக்கு இந்திரன் என்னும் பெயருண்டு! அந்தப் பேரரசன் கடாரம் வென்ருன்! வெற்றிக் கொடி நாட்டிய வீரன் இந்திரன்—தேவர் கோன் அல்ல!

இந்திர விழாவின் போது கடற்கரை ஓரம் காதலனும் காதலியும் ஓடி விளையாடுவார்கள். மணற் படுக்கையிலே மகிழ்ச்சியோடு இருக்கும் அந்தக் காட்சியைக் கண்டு நல்ல தமிழ் பயின்ற புலவர்கள் பனை ஓலைகளில் யாத்த பனுவல்களை மன்னர்களிடம் கொடுப்பார்கள். மன்னர்கள் உவந்தளிக்கும் பரிசு பெற்று வாழ்ந்தார்கள் புலவர்கள்! அத்தகைய சரித்திரப் புகழ் பெற்றவர்கள் நாம்!

மகிழ்ச்சியோடு கொண்டாடும் இந்த நேரத்தில் எண்ணிப் பார்த்தால் மனச் சங்கடமாகத்தான் இருக்கும்!

(11-ம் பக்கம் பார்க்க)

# கழகத்தை தாக்கிப் பேசுவதால் - நமது கட்டுப் பாட்டுணர்ச்சியை அழிக்க முடியாது!

(கருணாநிதி பேச்சு)

(10ம் பக்கத் தொடர்ச்சி)

அன்று வாழ்ந்தோம். இன்று தாழ்ந்த நிலையிலே உள்ளோம்! மீண்டும் நமது கொடி உயர்ந்தால் தான் குடி உயரும்! குடி உயர்ந்தால் தான் திராவிடர் ஆட்சியின் செங்கோல் நிலைக்கும்!

நமது லட்சியம் நாளுக்கு நாள் வளர்கிறது! நாம் உயர்கிறோம்! சூசகமாகவேச் சொல்கிறேன் 'நாம் உயர்வோம். நமது லட்சியத்தில் வெற்றி பெறுவோம்' என்ற நம்பிக்கை பலருக்கு வரவில்லை!

திராவிட நாடு கிடைக்குமா என்றுசந்தேகத்தோடுபலர் கேலி பேசி வருகின்றனர். சட்டசபையிலே ஒரு உறுப்பினர் பேசும் போது, திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் காணுகின்ற திராவிடநாடு இன்பக் கனவு பலிக்காது என்று கூறினார்!

திராவிடநாடுதிராவிடருக்காக வேண்டுமென்று இன்பக்கனவு தான் காண்கிறோம். இந்தியா விடுதலை அடைய வேண்டுமென்று காந்தி கனவு கண்டார். —நேரு கனவு கண்டார் பலிக்காமலா போய் விட்டது!

பாகிஸ்தான் பகற்கனவு பலிக்காது என்றார்கள்? ஜின்னா கண்ட கனவு பலிக்காமல் போய்விட்டதா? ஜின்னா கண்ட கனவு பலித்தபோது அண்ணா காணுகின்றகனவு நிச்சயம்பலிக்கும்!

பண்டிதநேரு என்ன கனவு காணாதவரா? நேரு சிறை சென்றார்! ஒருநாள் நிச்சயம்இந்தியா விடுதலை அடையும் என்று கனவு கண்டார்! அந்தக் கனவு பலிக்காமல் போய்விட்டதா?

யார் கனவு காண்பார்கள்? நன்றாக தூங்குபவன் தான்கனவு காணபான்! தூங்காதவன் தான் கனவு காணமாட்டான். பைத்தியக்காரன்தான் தூங்கமாட்டான்! நன்றாக தூங்கினால்தான் பைத்தியம் தொலைந்தது என்று வைத்தியர்கள் கண்டு பிடிக்கிறார்கள்!

நமது லட்சியத்திலே இருந்து ஓய்ந்து தூங்கினாலும், தூங்காதே தம்பி தூங்காதே என்று பாட பலர் இருக்கிறார்கள்! கனவு நிச்சயம் பலிக்கும், ஆகவே கனவு காண்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை திட்டிப் பேசுவதால் தனிப்பட்டக் கழகத்தின் கட்டுக்கோப்பை, கிளம்பும் பெரும் உணர்ச்சியை அழுத்திவிட முடியாது! அவர்கள் எண்ணம் பலிக்காது!

இந்தக் கட்சியை ஒழித்து விடுவேன் என்று காமராஜர் ஆர்ப்பரித்தார்! அரியலூர் அழகேசன் பார்க்கிறேன் ஒருகை என்று செங்கல்பட்டு மாநாட்டிலே முழங்கினார்! அதற்குப் பரிசாக தமிழ்நாடு அக்கிராசனர் பதவி அளகேசனுக்கு கிடைத்தது!

காங்கிரசின் தரம் குறைந்து விட்டது என்று கூறுகிறார்களே. அதை எடுத்துக்காட்ட காங்கிரஸ்காரர்கள் விரும்பினார்கள்! அதற்கு அத்தாட்சி அரியலூர் அளகேசன்!

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களை அளகேசன் கீழ்த்தரமாக கையாண்டி செய்கிறார். கண்ணியமாகப் பேசி வந்த நிதி அமைச்சர்கூட கண்ணியக் குறைவாக அவர் பாணியிலே பேசுகிறார்.

செங்கற்பட்டு மாநாட்டில் அறிஞர் அண்ணாவை பண்டாரம் என்று கேலி புரிந்தார்—கொங்கு நாட்டு தங்கம், குப்புற வீழ்ந்த சிங்கம் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள்!

நாங்கள் ஏழைகள் தான், ஓட்டை உடைசல்கள் தான், சாதாரணமானவர்கள் தான்; பெருமையோடு இதைச் சொல் சொல்லிக்கொள்கிறோம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் ஆலை அரசர்கள் அல்ல! பண்டாரங்கள் தான்! பண்டாரங்களின் தொகை இருபது இருபத்தைந்தானால், இருபத்தைந்து நூறானால்—நூறு ஆயிரமானால். ஆயிரம் பத்தாயிரமானால், பத்தாயிரம் லட்சமானால், லட்சம் இரண்டு கோடியானால் பண்டாரங்கள் கையில் ஓடு இருக்காது! திராவிடநாடு தரமாட்டோம் என்று கூறுகிற காங்கிரஸ்காரர்களின் மண்டை ஓடுகள் தான் இருக்கும்!

அறிஞர் அண்ணாவையா பண்டாரம் என்று சொல்கிறாய்? அண்ணா அவர்கள் தென்னாட்டுத் தலைவர்களிலே சிறந்த தலைவர், லட்சோப லட்சம் மக்களின் இதயத்திலே இடம் பெற்றிருக்கும் திரு உருவம். அண்ணா அவர்கள் புடம் போட்டத் தங்கம்.

திட்டம் கொடுக்க முடியாதவர்கள் என்றாய்! ஒரு காலத்தில் நிதி அமைச்சர் திராவிட நாடு வேண்டுமென்று வெளியே இருந்துதான் கூச்சல் போட முடியும், உள்ளே வரமுடியுமா என்றார். நாம் சட்ட மன்றத்திற்குள்ளே சென்றோம்! திராவிடநாட்டு பிரச்னை பற்றி பேசினோம். உள்ளே வந்த பின்னும் எந்தத் திட்டமும் தரக்காணோம், அண்ணாத்துரை ஆயிரம் கோடிக்குத் திட்டம் கொடுத்தால் ராஜினாமா செய்கிறேன் என்று சவால் விட்டார்! அண்ணா பயந்தார், திட்டம் கொடுத்தால் ராஜினாமா செய்துவிடுவாரோ என்று!

மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் பற்றி விவாதிக்க சர்வ கட்சியினரும் கூடிய கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் ஆயிரம் கோடிக்கு திட்டம் கொடுத்தார்!

முந்நூறு கோடி போதுமென்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறினார், கம்யூனிஸ்டு கட்சி தலைவர் கல்யாணசுந்தரம் ஐநூறு கோடி போதுமென்றார்,

அண்ணா அவர்கள் முந்நூறு கோடியும் போதாது, ஐநூறு கோடியும்போதாது, தற்காலிகத் திட்டம் பத்தாயிரம் கோடி இந்தியா முழுமைக்கும் செலவிட மத்திய அரசு திட்டமிட்டிருக்கிறது. ஆயிரம் கோடி கேட்பதிலே தவறில்லை என்று கூறினார்.

அண்ணா அவர்கள் ஆயிரம் கோடி கேட்டது வங்காளவிரிகுடாவிலோ, அரபிக்கடலிலோ வாரி இறைக்க அல்ல! திராவிடம் செழிக்க, சிறப்புற ஆயிரம் கோடி கேட்டார்.

இப்படிச் சொன்ன பிறகு நிதி அமைச்சர் பண்டாரம் கதை சொன்னார்! ஆனந்தவிகடன் பத்திரிகை ஆயிரம் கோடி ரூபாயா, யார் கொடுப்பார்கள் என்று கேட்டிருக்கிறது. யார் கொடுப்பார்கள்? பத்தாயிரம் கோடி தருகின்ற மக்கள்தான் ஆயிரம் கோடி ரூபாயையும் தருவார்கள். ஆயிரம் கோடி வேண்டுமென்று நாங்கள் தனியாகக் கேட்கவில்லை.

திட்டம் கொடுத்தால் நிறைவேற்றுகின்ற நிலையிலா இவர்கள் இருக்கிறார்கள்? இன்றுள்ள நிலைமை என்ன? கொடுக்கின்ற திட்டத்தை மூன்று காகிதத்தில் எழுதி, மூன்று காவடியில் அதைப்போட்டுக்கொண்டு காமராஜர் ஒரு காவடியும், பக்தவச்சலம் ஒரு காவடியும், சுப்பிரமணியம் ஒரு காவடியும் தூக்கிக் கொண்டு அண்ணாமலைக்கு அரோகரா என்று கோஷம் போட்டுக் கொண்டு டில்லியிலே இருக்கின்ற நேரு பெருமகனார் முன் காவடியை இறக்கி வைத்து, அவர் சேவடி தொழுது நிற்பார்கள்!

அவர் என்ன இது என்பார்! சென்னையில் அண்ணாதுரை என்ற படுபாவி இருக்கிறான். திட்டம் கேட்டோம், ஆயிரம் கோடிக்கு தந்தான். இதோ திட்டம் என்றால், ஏடா மூடா, உங்களுக்கென்ன கேடா—ஓடுங்கள் என்று நேரு கூறுவார். இப்படித்தான் இவர்கள் நிலை இருக்கிறதே தவிர திட்டத்தை நிறைவேற்றுகின்ற ஆற்றல், அறிவு, திறமை, தெம்பு, மானம், ரோஷம், சூடு, சொரணை இருக்கிறதா? திராவிடத்தை ஆட்டிப் படைக்கும் கங்காணிகள், வடநாட்டவரைப் பார்த்து எங்கள் தாயகத்தை எங்களிடம் கொடுங்கள் என்று கேட்கிறோம் கொடுக்க மறுக்கிறார்கள்.

திராவிடம் வளம் பெறத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் அருமையான திட்டத்தை, அழகானத் திட்டத்தைகொடுத்தா.

திராவிடம் பிரிந்தால் வாழ முடியுமா என்று கேட்கிறார்கள் நாங்கள் எங்கள் தாயகத்தை கேட்பதிலே என்ன தாழ்ச்சி இருககிறது!

எங்கள் திராவிடம் நல்ல—வளமான நாடு.

(12-ம் பக்கம் பார்க்க)

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வேறுபாடு இருந்தாலும், கொள்கை முரண்பாடு இருந்தாலும் அவைகளை யெல்லாம் மறந்து திராவிட முன்னேற்றக் கழகத்தோடு ஒத்துழைத்த கம்யூனிஸ்ட்டு கட்சிக்கும், சுதந்திரா கட்சிக்கும், மற்றுமுள்ள எல்லா கட்சிகளுக்கும் நன்றி செலுத்திட கடமைப் பட்டுள்ளோம்! நாம் ஒன்று பட்டது வீண் போகவில்லை! அதிகாரத்தில் அமர, சட்டசபை மண்டபத்திற்குள் நுழைய வாய்ப்புக் கிட்டவில்லையே தவிர—நம் செல்வாக்கை எடுத்துக் காட்ட ஆளும் கட்சிக்கு எதிராக ஒரு பெரும் சக்தி நாட்டிலே உருவாகிக் கொண்டு வருவதை உணர்த்த இந்த ஒற்றுமை பயன்பட்டிருக்கிறது! வாழ்க இந்த ஒற்றுமை! என்றும் வளர்க இந்த ஒற்றுமை!

நாட்டின் நிலையை உணர்ந்த பின்பும், பதின் மூன்று ஆண்டுகாலமாக காங்கிரஸ் ஆட்சியில் படாத பாடுபட்ட பின்பு 32,153 பேர்கள் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்திருக்கின்றனர்! பரவாயில்லை! அவர்களுக்கும் நாங்கள் நன்றி செலுத்திட கடமைப்பட்டுள்ளோம்! 'இன்னும் கொஞ்ச காலம் சர்வாதிகாரத்தை நீடிக்க வைத்திருக்கிறீர்கள்! அதுவும் நல்லது தான்! அனுபவித்த கொடுமைகள் போதாது! இன்னும் அனுபவியுங்கள்! அனுபவித்த பின்பு ஒரு முடிவுக்கு வாருங்கள்!

இந்தத் தேர்தலில் வெற்றியை நிர்ணயித்தவர்கள் 758 பேர்கள்! இந்த 758 பேர்களையும் ஏன் எல்லோரையுமே நாம், நம பக்கம் கொண்டு வர வேண்டும்! இதற்காக கழக நண்பர்கள் அரும்பாடுபட வேண்டும்! இன்னும் இரண்டே ஆண்டுகளில் நாம் பலனைக் காண்போம! கவலை வேண்டாம், களிப்போடு இருங்கள்! இறுதி வெற்றி உண்மைக்கே!

Registered as a Newspaper in CEYLON
இலங்கையில் 20 சதம்
Regd No M. 7074 விலை 16 காசு **MALAIMANI** Phone No. 83285

[11-ம் பக்கத் தொடர்ச்சி)

வற்றாத ஜீவநதிகள்-வளமான பூமி இருக்கிறது. கனிகுலுங்கும் சோலை இருக்கிறது. அதைப் போலவே இலக்கியச் சோலை இருக்கிறது. இத்தனை சிறப்புள்ள தாயகத்தை நாங்கள் ஆள்வோம் என்று கூறுவதிலே, என்ன தாழ்ச்சி இருக்கிறது?

மூன்று பக்கம் கடல் இருக்கிறது! முல்லைக் கொல்லை இருக்கிறது! அதற்குப் பக்கத்திலே ஆற்றோரம் இருக்கிறது! கனி குலுங்கும் சோலை இருக்கிறது! அதிலே மான், மயில், மாடப்புரு குயில், சிட்டு இன்னோரன்ன அங்கே உண்டு! கனிகுலுங்கும் சோலையிலே காதலர்கள் பாடும் அகநானூறு—தென்னாட்டு தெம் மாங்கு, போர் முறை விளக்கும் புறநானூறு அத்தனையும் உண்டு! பூமியைத் தோண்டினால் தங்கம், பகைவர்கள் தீண்டினால் நாமெல்லாம் சிங்கம்! இத்தனை வரலாறு படைத்திட்ட நமது அருமை திராவிடத்தை மீண்டும் பெற வேண்டுமென்ற சூளுரையை நீங்கள் இதயத்திலே ஏந்திச் செல்ல வேண்டுமென்று கூறி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

## செல்வி அருளரசி காதணி விழா !

சமூக சேவையும் சன்மார்க்க தொண்டாற்றுபவருமான செ. கலைச்செல்வி அம்மையாரின் குழந்தை அருளரசிக்கு, சென்னை சந்திரப்ப முதலி தெரு, 16-ஏ, எண்ணுள்ள இல்லத்தில் 11—1—60 திங்கட்கிழமை காலை காதணி விழா நடைபெற்றது. அந் நல்விழாவில் செ. கலைச் செல்வி அவர்கள், வந்திருந்த புலவர் பெருமக்களையும் மற்றுமுள்ள உறவினரையும் வரவேற்று பேசியபொழுது கண்ணகி பிறந்த இந்த தமிழகத்தில் என் குழந்தை தமிழ்ப்பெண்ணாக பிறக்கும் பேறு பெற்றதற்கு மகிழ்கின்றேன் என்று கூறி திரு



வாளர் கு. மு. அண்ணல்தங்கோ அவர்களை தலைமை தாங்கி விழாவை நடத்தித் தரும்படியும் கேட்டுக் கொண்டார். தலைவர் முன்னுரைக்குப் பின் பேசிய பண்டித. வை. நடேசனார், பன்னெடு நாள் தமிழகத்தில் பல நலம் பெற்று வாழ்ந்து நற்பணிகள் பல ஆற்ற நல் வாழ்த்து வாழ்த்துகிறேன் என்றார். தொடர்ந்து டி. எஸ். சீபால், சிதம்பரம் என். தண்டபாணி பிள்ளை, பார்வதி அம்மையார், வா. ப. தாமரைக்கண்ணியார், பேராசிரியர் மயிலை சிவமுத்து முதலானோர் வாழ்த்து கூறினர். திரு. சிறுவை மோகனசுந்தரம் பேசுகையில் — கலைச்செல்வியாரின் அருமை திருமகளார், அருளரசி, பிறர் நோய் நாடி தன் நோய் பாராது நாளும் நற்றொண்டு செய்த டாக்டர் தருமாம்பாள் போலவும், மக்களுடைய துன்பத்தை துடைக்கும் அருளரசியாகவும் விளங்கவேண்டுமென்று வாழ்த்தினார், மற்றும் லாயல் அச்சகம் காளத்தி நடேச முதலியார், பிரம்ம சமாஜம் செயலாளர் சி. எஸ், நடேச முதலியார், ச. சச்சிதானந்தம் பிள்ளை, ஆ. அருள் தங்கையா வாழ்த்து வழங்கினர்கள், தலைவர் முடிவுரையில் தன்னிகரில்லாத தனி மொழியாம் திருக்குறள் ஓதி, உலகச் செல்வம் யாவும் பெற்று, நோயற்று நீண்ட நாள் உலக அரசியாய் உலகனைத்தும் இன்புற வாழ வேண்டுமென்று கூறினார். திருச்சி இ. ஆ. பெ, விசுவநாதம் வாழ்த்து அனுப்பியிருந்தார். திருமறைக் காவலர் டி. எஸ். லோகநாதன் நன்றி கூற இனிதாக விழா முடிவுற்றது.

திராவிட நாடு — திராவிடருக்கே !

# தஞ்சை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முதல் மாநாடு

## குடந்தை அரண்மனைத் தோட்டம் பேராசிரியர் இருதயராஜ் பந்தலில்

நாவலர் சோமசுந்தர பாரதியார் அரங்கில்
14-2-60 ஞாயிறு அன்று காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெறும்

தலைவர்: திரு. கோவை. செழியன், B.A.,

திறப்பாளர்: தோழியர் S. P. சற்குணம்

**திரு. S. D. சோமசுந்தரம் B.E.**
(மாணவர் கழகப் பொதுச்செயலாளர்)

—மற்றும்—

திரு. டி. கே. பொன்னு வேலு, (M.A.) — 'திராவிடத்தின் பொருளாதார நிலை'
... க. இராசாராம், B.A. — "அரசியல் தத்துவம்"
... பி. இராசமாணிக்கம். B.A., B.L. — "அரசியல் நிர்ணயச் சட்டம்"
... கோவை. சு. ஆறுமுகம், B.A., (B.L.) — "மாணவர்களும் பொதுப்பணியும்"
... கே, ஏ. கிருஷ்ணசாமி, B,A. (Hons.) — "தேசியம்"
பூவை. ந. இராமானுசம், B.Com. (Hons.) (B,L.) — "திராவிடத்தின் தொழில் வளம்"
... என். வி. என். சோமு, (B.A.) — 'மாணவர்கள் நேற்று-இன்று-நாளை'
... சீர்காழி. சோமசுந்தரம், B,A., (B.L.) — "நாட்டு விடுதலையில நமது பங்கு"
... 'முரசொலி' மாறன், M.A. — 'ஏன் வேண்டும் இன்பத்திராவிடம்'
... இரா. இளவரசு, (B.A. Hons.) — "திராவிடத்தின் வரலாறு"
... தி. அழகிரிசாமி, (B.A; Hons.) — ஏன் வேண்டும் திராவிட மாணவர்
... டி. கே. கோபாலகிருஷ்ணன், (M.A.) — 'மக்களாட்சி' [முன்னேற்றக் கழகம்
... கு. இந்திரசித். (B.A.) — "தென்னகத்தின் அரசியல்"
... ஜே. எஸ். இராசு, B.A. — "அரசியலும் மாணவர்களும்"
... சா. பெ. மலைச்சாமி, (B.A., Hons.) — "ஆளும் கட்சியும் மாணவர்களும்"
... உ. பில்லப்பன், M.A. — "திராவிடம் பிரிந்தால் வாழுமா"
... பொன். இராமலிங்கம், (B.A.) — "கண்ணீர்த் துளிகள்"
... கரந்தை. கணேசன் — "சங்க காலத்தில் தமிழர் பண்பாடு"
... கரு. கதிரவன், B.A. — "திராவிடம் அன்றும்—இன்றும்"
... ப. மாணிக்கவாசகம், B.A., B,L. — "நாட்டுப் பிரிவினையும் சட்டப் பிரச்
... தஞ்சை. புதுமதியன், (B.Sc.) — விடுதலையா? பிரிவினையா? [சினையும்
... மதுரை. சௌந்தரராசன். B.A. — "திராவிடத்தில் இந்தி"

ஆங்கிலத்தில்

எம். எஸ். வெங்கடாசலம், M.A., (B.L.) — The Medium of Instruction in Universities
அ. கதிரொளி (B.A., Hons.) — The Dravidian Element in Indian Culture

ப. நெடுமாறன், (B.A., Hons.) க. ராசேந்திரன், (B. Sc.), கே. சம்பத் B.E. மோகனதாஸ் (M.B., B.S.) உ. கணபதி, M.A., சி. என். ஏ. பரிமளம், அ. இளங்கோவன், எஸ். ஆர். பாலசுப்ரமணியம், B.A., எம். கருப்புசாமி, பி. பாலசுப்பிரமணியம், (B.A.), திராவிடமணி, (B.A.,) சொல்லாளன், காசிம், (B,A.) கிருட்டிணன், (B.A.), அன்வர், (B.A.), நச்சினார்க்கினியன், (B.A.) கே. கே. என். தங்கதுரை, தமிழ்ச்செல்வன், அறிவொளி, மலையப்பன், மயிலை சீனிவாசன், புகழேந்தி, மாமூலன், முகிலன், B.A., சு, புதுமைப்பித்தன், நெல்லை, எம். ஜி. இராமச்சந்திரன், அன்பழகன், திருமாவளவன்: எழிலன் மற்றும் பல தோழர்களும் கலந்துகொள்வார்கள்.

அனைவரும் வாரீர் ! — ஆதரவு தாரீர்!

**பி. வி. செழியன், (B A. Hons.),**
(வரவேற்புக் குழுத் தலைவர்.)

இரவு 9 மணி அளவில் 'பாவம் தமிழையா' என்னும் நாடகம் நடைபெறும்.
கட்டணம்: 3, 2, 1, 0-50

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ். இளங்கோ, கல்விப் பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14